சி:கி 307
Rs.
Acc-mlcu 00786

# ஸ்ரீசரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்.

Published on behalf of

THE TA ORE PALACE DEVASTANAM

by

**L. S. SWAMINATHA AYYAR,**
B. A., B. L.,
Treasurer & Manager.

All Rights Reserved by
THE TANJORE PALACE DEVASTANAM.

**PRIC ]** **1940.** **[ A**



ஸ்ரீ பிரகதீஸ்வரஸ்வாமி கோவிலின் முன் தோற்றமும்,

குறவஞ்சி நாடகம் நடைபெறும் அரங்கமேடையும்.

1144 — N/98

உ

ஸ்ரீ பிரகதிஸ்வரர் துணை.

தஞ்சாவூர் மஹாராஷ்டிர அரசர்களில்

H. H. சரபோஜி மஹாராஜா சத்திரபதி

அவர்களின் பேரில்

கோட்டையூர் ஸ்ரீசிவக்கொழுந்து தேசிகர்

— இயற்றிய —

# ஸ்ரீ சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்.

இவை

தஞ்சாவூர் அரண்மனை இலாகா தேவஸ்தானம் ஆதினஸ்தரும்,

பரம்பரை டிரஸ்டியும், Senior Princeமான

ராஜஸ்ரீ ராஜாராம் ராஜா சாகேப்

(Great Grandson of late H. H. Sivaji Maharaja the last ruler of Tanjore)

அவர்களுடைய உத்திரவாலும், ஆதரவாலும்,

தஞ்சாவூர் அரண்மனை இலாகா தேவஸ்தானங்களின்

டிரஷரர் & மானேஜருமான

ஸ்ரீ L. S. சுவாமிநாத அய்யர் B. A., B. L.,

அவர்களால் வெளியிடப்பட்டது.

விக்கிரமஹு மார்கழிமீ

வெற்றிவேல் அச்சுக்கூடம், தஞ்சை.

1940

All rights reserved.



His Highness ஸ்ரீ சரபோஜி மஹாராஜா சத்ரபதி

(கி. பி. 1800—1832)

பாட்டுடைத்தலைவர்.

உ

ஸ்ரீ பிரகதீஸ்வரர் துணை.

# முகவுரை.

தனியரெத் தனையொ ராயிர வருமாந்
தன்மைய ரென்வயத் தினராங்
கனியரத் தருதீங் கரும்பர்வெண் புரிநூற்
கட்டிய ரட்டவா ரமிர்தர்
புனிதர்பொற் கழலர் புரிசடா மகுடர்
புண்ணியர் பொய்யிலா மெய்யர்க்
கினியரெத் தனையு மிஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவர்க்கே—

செந்தமிழ் மொழியில் வழங்கிவரும் தொண்ணூற்றுறு நூல் வகைக்குள் குறவஞ்சியும் ஒன்றுகும். குறவஞ்சி குறத்திப் பாட்டெனவும், குறவஞ்சி நாடகம் எனவும் வழங்கும். குறவஞ்சி என்பது தலைவன் பவனி வருதல், மகளிர் காமுறுதல், மோகினி வரவு, உலாப் போந்த தலைவனைக் கண்டு மயங்கல், திங்கள் தென்றல் முதலியவற்றைப் பழித்தல், பாங்கியுற்றது என்னை வினவுதல், தலைவி பாங்கியோடுற்றது கூறல், பாங்கி தலைவனைப் பழித்துக்கூறல், தலைவி தலைவனைப்புகழ்ந்து கூறல், தலைவி பாங்கியைத் தூது வேண்டல், தலைவி பாங்கியோடு தலைவனடையாளங் கூறல், குறத்தி வரவு, தலைவி குறத்தியை மலைவள முதலிய வினவல், குறத்தி மலைவளம் நாட்டுவளம் முதலிய கூறல், தலைவன் ஊர் சுற்றம் முதலிய வளங்கள் கூறல், குறிசொல்லி வந்தமை கூறல், தலைவி குறிகேட்டல், குறத்தி தெய்வம் வேண்டுதல், குறிதேர்ந்து நல்வரவு கூறல் தலைவி பரிசிலுதவி விடுத்தல், குறவன் வரவு, பறவை வரவு பகர்தல், கண்ணிகுத்தல், பறவை படுத்தல், குறத்தியைக் காமுற்றுத் தேடல், குற

வன் பாங்கனொடு குறத்தியடையாளங் கூறல், குறவன் குறத்தியைக் கண்ணுறுதல், குறவன் அணி முதலிய கண்டு ஐயுற்றுக் கேட்டலும் அப்போதைக்கப்போது குறத்தி விடை கூறலுமாகக் கூறல்; பெரும்பான்மையும் இவ்வகை யுருப்புக்களால் அகவல், வெண்பா, தரவு கொச்சகம், கலித்துறை, கழிநெடில் விருத்தம், கலிவிருத்தம் இச்செய்யுள் இடையிடையே கூறிச் சிந்து முதலிய நாடகத் தமிழாற் பாடுவது.

சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் தஞ்சாவூரில் அரசு செலுத்திய மகாராட்டிர மன்னர்களுள் ஒருவரான இரண்டாவது சரபோஜி மன்னர் (A. D. 1800—1832) மீது, அவரது அவைக் களப் புலவராக யிருந்த கொட்டையூர், ஸ்ரீசிவக்கொழுந்து தேசிகர் என்பவராற் பாடப்பட்டது. இடையிடையே விருத்தம், அகவல், வெண்பா முதலிய செய்யுட்களையும், வசனத்தையும் கலந்து கீர்த்தன வடிவமாக அமைந்துள்ளது. படிப்போர் எளிதில் அறியும் வண்ணம் எளிய நடையில் அமைந்துள்ளது. சரபோஜி மன்னர் பாட்டுடைத் தலைவராக இருப்பினும் தஞ்சைப் பெருவுடையாரின் சிறப்பும், மகாராட்டிர மன்னர் வழிபடு தெய்வமாகிய ஸ்ரீ பவானி சந்திர மௌளீஸ்வரரின் பெருமையும் கொண்டு சங்கீதமும், அபிநயமும், நடனமும் கலந்துவரும் ஒரு நாடக நூலாகும்.

இக்குறவஞ்சி நாடகமானது தற்போது தஞ்சை சீனியர் பிரின்ஸூம் பரம்பரை டிரஸ்டியுமான இராசராச ஸ்ரீ இராஜாராம் ராஜா சாகேப் அவர்கள் ஆதினத்துக்குட்பட்ட தஞ்சைப் பெருவுடையாராலயத்திலே [பிரஹதீஸ்வரர் கோயில்] வருடந்தோறும் நடந்துவருகிற சித்திரை பிரமோற்சவ காலங்களில் எட்டாந் திருநாள் மாலையில் பெருவுடையார் திருமுன் ஒத்திகையாகவும், அஷ்டகொடி என்று சொல்லப்படுகின்ற ஒன்பதாந் திருநாளன்று இரவு தியாகராசப் பெருமான் உலாவந்து வசந்தமண்டபத்தில் எழுந்தருளிய பின்னர் நாடகம் நடத்துவதற்கென்று ஏற்பட்ட மேடையில் தேவரடியார்களால் நடிக்கப்பட்டும் வருகிறது. அன்றியும் போசல குல வம்சத்தினரின் திருமணக் காலங்களிலும் இதர

விசேஷ தினங்களிலும் அவர்கள் வழிபடு தெய்வமாகிய தஞ்சை அரண்மனையிலுள்ள ஸ்ரீ சந்திர மௌளீஸ்வரர் சன்னதியிலும் அரண்மனையிலும் அரண்மனை தேவஸ்தான பரம்பரை டிரஸ்டியின் உடன்பாடு பெற்று நடிக்கப் பெற்று வருகிறது.

இந்நாடக நூல் ஏற்பட்ட காலம் முதல்கொண்டு இதில் உள்ள பாட்டுகளுக்கென்று அமைத்துள்ள தீர்மானங்களும் சுரங்களும், சரபோஜி மஹாராஜா காலந்தொட்டு நாடகம் நடத்துங் காலங்களில் பாடப்பட்டு வழங்கிவருகிறது. இன்றியமையாத சிற்சிலவிடங்களில் உரைநடையில் உரையாடலும் சேர்ந்திருக்கிறது.

இந்நாடகத்தில் மதனவல்லி மன்மதனைப் பழிக்கும் பாட்டில் (19) பத்தொன்பது வருடங்களின் பெயர்களை யமைத்துப் பாடப் பட்டிருப்பது அறிந்து மகிழத்தக்கதாயிருக்கிறது. அன்றியும் முதல் வருடமாகிய பிரபவ என்று துடங்கி, இறுதி வருடமாகிய அக்ஷய என்று நயம்பட முடித்திருப்பது வியக்கத்தக்கதே.

சரபோஜி மன்னருடைய வாசல் வளம் கூறும் பகுதி படித்துப் படித்து இன்புறத்தக்கதாகும்.

குறத்தி தெய்வங்களை வேண்டும்போது தஞ்சை அரண்மனை தேவஸ்தானங்களில் உள்ள கோயில்களில் எழுந்தருளியிருக்கின்ற இரட்டைப் பிள்ளையார், வெள்ளைப் பிள்ளையார், ஆனந்தவல்லி முதலிய தெய்வங்களை பரவுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. இன்னும் இவைபோன்ற பலவற்றையும் இந்நூலில் விளங்கக் காணலாம்.

இந்நாடகத்தை நடிக்க அல்லது பேசும் படமாகபிடிக்க உத்தேசமுள்ளோர் தேவஸ்தான பரம்பரை டிரஸ்டி அவர்களின் எழுத்து மூலமான சம்மதத்தைப் பெற்றாலொழிய நடத்தக்கூடாது இந் நாடகத்தின் எல்லா உறிமைகளும் தேவஸ்தானத்தாருக்கு சொந்தமானது.

தஞ்சாவூர்,
26—12—40

L. S. சுவாமிநாதய்யர், B. A., B. L.,
டிரஷரர் & மானேஜர்.



ஸ்ரீமந்த் ராஜஸ்ரீ. ராஜாராம் ராஜா சாஹேப் சத்ரபதி.
ஸீனியர் பிரின்ஸ் & பரம்பரை ஆதீனஸ்தர்
அரண்மனை இலாகா தேவஸ்தானங்கள்,
தஞ்சாவூர்.

உ

ஸ்ரீ பிரஹந்நாயகி ஸமேத ஸ்ரீ பிரகதீஸ்வரர் துணை.

# ஸ்ரீ சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்.

காப்பு—விருத்தம்.] [ராகம் - நாதநாமக்கிரியை.

பார்கொண்ட புகழினேங்கும் பதியெனுந் தஞ்சைமேவுந்
தார்கொண்ட மார்பனெங்கள் சரபோஜி மன்னன்மீது
சீர்கொண்ட தமிழினாலே திகழ்குற வஞ்சிகூறப்
பேர்கொண்ட பிரகதீசர் பெறுகண பதிகாப்பாமே.

ஸ்ரீ சந்திர மௌலீஸ்வரர் துதி விருத்தம்.

ராகம்—நாதநாமக்கிரியை.

தன்னிகர் செல்வன் றஞ்சைச் சரபோஜி மன்னன்மீது
நன்னயத் தமிழினாலே நவில்குற வஞ்சிகூற
உன்னுபோ சலகுலத்துக் குயர்குல தெய்வமாகி
மன்னுசந் திரமௌலீசர் மலர்ப்பதங் காப்பதாமே.

## காட்சி I

### கட்டியக்காரன் பிரவேசம் - விருத்தம்.

ராகம் - நாதநாமக்கிரியை.

வரமுறு சரபமன்னர் வளர்தஞ்சை நகரந்தன்னில்
மருவுமோ கினிப்பெண்மேவும் வாசற்கட்டியக்கா ரன்முன்
குரவமென் மலர்ப்பூங் கோதைக் குறவஞ்சி நாடகத்திற்
கருள்கண பதிவந் தாரென் றவையின்முன் சொலவந்தானே.

## கட்டியக்காரன் பாட்டு.

ராகம் - நாதநாமக்கிரியை.] [தாளம் ஆதி.

பல்லவி

கட்டியக் காரன்வந் தானே — ஒய்யாரமாகக்
கட்டியக்காரன் வந்தானே

(கோறப்பு) தாக்க, தீந்த, தத்த, தீந்த, தத்த,
தீந், தத்த, தீந், தத்த, தீந்த, தீந்தரி கிடதக
தக ததிங்கிணதோம். தா—தை (2 தடவை)
தீந்தரி கிடதக தகததிங்கிணதோம் தா—கிடதக தை
தாதா தாதீ, தாதாதீ, தாதாதீ, தக ததிங்கிணதோம்
தத்தெய்யா தெய்யா தெய்யா தாதாதாதீ
(ஷ சவுக்க காலம் 4 தரம், மத்தியம காலம் 4 தரம்)
தா தை தளாங்கு தகதிகிதக ததிங்கிணதோம்
கட்டியக்காரன் வந்தானே

அனுபல்லவி

கட்டிய கொண்டை வனப்புறு சென்னியிற்
கட்டழ குருமாலை கட்டிக்கொண்டு நல்ல (கட்டியக்)

சரணங்கள்

மிகவெழி லுற்றிடு காவிச் சல்லடம்
மிசைசுற் றிடுகச்சை யிறுக்கியே
தகதிமி தக்கிட திக்கிட வென்னத்
தருக்குடன் மேன்மீசை முறுக்கியே (கட்டியக்)

புகலுறு நெற்றியி லிட்டிடு சிந்துரப்
பொட்டுடன் பொற்பிரம் பேந்தியே
மகாராஜ ராஜுக்குச் சரபோஜி ராஜுக்கு
மந்தர ராஜுக்குச் சலாமெனவே (கட்டியக்)

தரணி புகழ்ந்திடு மன்னர்கள் சூழத்
தகவுடு கணத்திடை மதியென மேவும்
வரபோ சலகுல மணியிணைக் கண்டு
சரபோஜி மகாராஜா சலாமெனப் பணிந்து. (கட்டியக்)

### கட்டியக்காரன் வசனம்.

ராஜாதி ராஜன், ராஜமார்த்தர்ண்டன், ராஜ கோலாகலன், தஞ்சை நகர் ஸ்ரீசரபோஜி மகாராஜா அவர்கள் பேரில் குறவஞ்சி நாடகம் பாடி பூர்த்தியாகும் பொருட்டு ஸ்ரீ மகாகணபதி துதி செய்வோம். ஸ்ரீ கணபதி வருகின்றபடியால் வீதிகள் தோறும் மகுட தோரணம் கட்டி பூரண கும்பங்கள் வைத்து அலங்காரம் பண்ணும் பொருட்டு சபையில் சொல்ல வந்தேன்.

### திரை பிடிக்கவும்.

கணபதி—விருத்தம்.] [ராகம் - நாதநாமக்கிரியை.

சந்ததமு மெண்மர்குடி கொண்டு நிற்கத்
தாரணியி லனைவர்களு மகிழ்ந்து வாழத்
தொந்தமின்றி யுழுவைபசுத் துறையிற் கூடிச்
சுகமாக விளையாட வரசி யற்றும்
சுந்தரனுஞ் சரபோஜி மன்னன் மீது
சொல்லுகின்ற குறவஞ்சித் தமிழைக் காக்கத்
தந்திமுக னுருவா கனமீ தேறிச்
சபையோர்க்குக் காட்சிதரத் தோன்றினரே.

### திரை விலக்கல்

## ஸ்ரீ கணபதி பிரவேசம்.

ராகம் - மத்தியமாவதி.] [தாளம் ஆதி.

பல்லவி

கணபதி வந்தாரே —கருணாகரரான
கணபதி வந்தாரே.

### அநுபல்லவி

மணமலர்ச் சோலைசூழ் தஞ்சைச் சரபோஜி
மகராஜன் சபைதனி லனைவரு மகிழ்ந்திட (கணபதி)

### சரணங்கள்

ஆகுவா கனர்வந்தார் அம்பிகை தனயர் வந்தார்
பாகசா தனன்போற்றும் பாதபங் கயர்வந்தார் (கணபதி)

வாமன ரூபர் வந்தார் மகேசுவர புத்ரர் வந்தார்
சோமசே கரர்வந்தார் சூர்ப்பகர் ணர்வந்தார் (கணபதி)

ஐந்து கரத்தர் வந்தார் ஆனைமா முகத்தர் வந்தார்
தொந்தி வயிற்றர்வந்தார் தொழுமொற்றைக் கொம்பர்
வந்தார் (கணபதி)

---

### கட்டியக்காரன் கணபதியை நமஸ்கரித்து பூஜை செய்தல்.

### கட்டியக்காரன் வசனம்

இன்றையதினம் சபையில் நடத்தப்போகும் இச் சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் விக்கினமின்றி பூர்த்தியாகும் பொருட்டு வரமருள வேண்டும்.

---

### கணபதி வசனம். ததாஸ்து

### விநாயகர் மறைதல்

உடன் கட்டியக்காரன் ஸ்ரீ சரபேந்திரர் மகிமையும் நகர் வளமும் நீதி செலுத்தும் மகிமையும் அவர் பவனி வருதலும் சொல்லுகிறான்.

---

## நேரிசை ஆசிரியப்பா

பார்கொண்ட தென்றிசைப் பர்தகண் டத்திற்
சீர்கொண்ட சோழத் திருநா டதனிற்
றிருமக ளிருக்குஞ் செந்தா மரையாய்
விரவுபா ரதிக்கு வெண்டா மரையாய்

அளவில்செல் வத்தா லளகைமா நகராய்
உளமகிழ் சிறப்பி னும்பர்நா டாகி
வேதமும் வேள்வியு மிகுந்தய னுலகாய்
மாதவ னுறைதலின் வளரவன் பதியாய்ச்
சேவுயர் கொடியோன் றிகழ்தலிற் கைலையாய்

யாவரு முறைதலி னெழிற்சிவ புரியாய்
மீதலத் தோங்கிய விறன்மிகு மதிலும்
பாதலத் தணுகிய பரவுநீ ரகழியும்
வேதியர் நியமமும் வேந்தர்தம் வீதியும்
பேதமில் வணிகர் பின்னவர் தெருக்களும்

மாடமா ளிகைகளு மகிழர மியங்களும்
நீடுகைத் தந்திக ணிலவிடும் பந்தியும்
வளர்பரிக் குலங்கண் மருவிடு சாலையும்
அளவில்பல் பண்டத் தாவண நிரையும்
விளங்கெழிற் றஞ்சை வியன்பதி யிடத்து

வளங்கொள்போ சலகுல வரோதய னாகிய
மருவுசீர்த் துளசி மன்னவன் புத்திரன்
சரபோஜி யென்னத் தகுமியர் பெயரினேன்
ஆகமங் கலைக ளருமறை புராணம்
பாகுறு மனுநூல் பலவுநன் குணர்ந்தோன்

படைகுடி கூழமைச்சுப் பகர்ந்திடு நீதி
நட்பர ணிவற்றி னயந்திடுஞ் சிறப்பினேன்

கோடையினின் முகிலலே கொண்டிட வலேத்துத்
திடமதின் மேருவைச் சிரங்குனி வித்து
வேள்வியிற் சதமகன் வெள்கவிண் ணடக்கிக்

கேள்வியி லநந்தனேக் கீழ்ப்படச் செய்து
வடிவினிற் சிலேக்கை மதனனே மறைத்துத்
தடையிலா துயிர்க்கெலாந் தண்ணளி புரிந்து
புகலரி யணேமிசைப் பொருந்தவீற் றிருந்து
மகிதலம் புரப்பவன் மன்னவர் பெருமான்

உலகமன் னவர்க ளூற்றெதிர் பணிய
நலமுறு காசி நண்ணியொண் கங்கை
மென்புனல் படிந்து விச்சுவ நாதன்
தன்பத பங்கயந் தனேயெதிர் பணிந்து
வேண்டிய வரங்கள் விருப்புட னேற்று

நீண்டிடு மகிழ்ச்சி நிலவுற வந்தோன்
பொன்னெடுந் தேர்களும் பொருந்துகுஞ் சரங்களும்
பன்னுயர் பரிகளும் பதாதியுஞ் சூழ
மன்னவர் குழுவு மந்திரத் தலேவரும்
தந்திகர் மந்திரி தந்திரக் கணமும்

சேனேத் தலேவருஞ் செறிந்திடு நண்பரும்
தாணு பதிகளுந் தண்புடை நெருங்கத்
தூரிய முழங்கத் துலங்குபொற் றெடிக்கை
நாரிய ரளவிலர் நடனஞ் செய்யப்
பாலெலிற் கவரிகள் பாங்கின ரிரட்ட

மேலுயர் பொற்கால் வெண்குடை நிழற்றக்
கண்கொடு கண்டோர் களிக்கப்
பண்புறு யானேமேற் பவனிவந் தனனே.

## மகாராஜா பவனிவருகிறபோது சகிகளுடன் மோஹினி ஊர்வலத்தைக் கண்ட செய்தியைக் கூறுகிருள்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

தரணிபுகழ்ந் திடுந்தஞ்சைச் சரபநரேந் திரன்பவனி
தன்னைக்கண்டு
வரியளிசூழ் மலர்க்கூந்தன் மதனவல்லி யெனுமொருமின்
மருகினூடே
பெருமயலுங் கிறுகிறுப்புங் கொண்டந்த மன்னவனைப்
பின்றொடர்ந்து
மருவுதற்குக் காதல்கொண்ட தகைசொல்வே னெவர்களுக்கும்
வகைசொல்வேனே

காட்சி முடிவு.

## காட்சி II.

## சகிகள் தோன்றி பவனிவரும்போது மகாராஜாவைக் கண்டு காமுற்ற தலைவி மதனவல்லியை வர்ணித்தல்.

சகிகள் பாட்டு.

ராகம் - பிலஹரி ] [ தாளம் - மிச்ரம்

அந்த மதனவல்லி வண்டைநான் கொண்டிடச்செய்
யோதியாள் பாரில்
அங்கணையார் தங்களினுத் துங்கமுறு பதுமினிச் சாதியாள்

தீர்மானம்.

தாந் தத்தி - தா - தி - திந் தக்க
தாந் தத்தி - தா - தீ - திந்தக்க தாந் தத்தீ
தா - தாந்தத்தி - திந்தக்க - தாந்தத்தி
தா - தாந்தத்தி - திந்தக்க (துரிதகாலம். 2 தடவை)

தக்க - தக்க - தக்க - தக்க
திக்கி - திக்கி - திக்கி - திக்கி
தாந்தி - தாந்தி - தக்க - திக்கி ததிங்கிணதோம்

த - தெய்ய - தெய்ய - தெய்யதாதாதா தீ
தா - தை - தளாங்கு தகதிகி தக ததிங்கிணதோம்

கந்தமலர்க் காந்தளினை முந்துமலே யேறவைத்த
கையினுள் - மாற்றில்
கனத்தசெங் கனகத்தைமே லடித்துப் பணிசெயச்செய்
மெய்யினுள்
தங்கமுலே பம்பரத்தை யம்புவிமீ தாட்டிடுமா
தங்கமே - இடை
சாயலுறு நற்றுடியை வாயிலறை வித்திடுமோர் சிங்கமே
புங்கமுறு மம்புயத்தைப் பங்கமுற்ற தென்னவொளிர்
முகத்தினுள் - வானிற்
பொலிந்திலங்கு வெண்பிறையைக் களங்கமுற்ற தென்ருேது
நகத்தினுள்
கண்டோர் மனத்தைதத்தன் சுழிக்கு ளழுத்திடும்
உந்தியாள் - கொங்கைக்
களிற்றுத் தறியென்ன வயிற்றின்மே லுரோம பந்தியாள்
விண்டிடுங் கன்னலேச் சாறு பிழிந்திடுந் தோளினுள் - மாவின்
விளங்குந் தளிர்கண்டு பயந்தங் கிருக்கச்செய் தாளினுள்
மருவுற்றி டுங்குமிழை வனந்தி லொதுக்குவித்த
மூக்கினுள் - இந்த
வையத் திராதமுதம் வானத் தொளிக்க வைத்த வாக்கினுள்
தருமனெனக் கூற்றை யெவருஞ் சொல்லக்கூர்த்த
நயனத்தாள் - தஞ்சைச்
சரபோஜி நரபாலர் கருணை தனக்கேற்ற வயனத்தாள்

மேற்கண்ட தீர்மானம். (அந்த மதனவல்லி)

காட்சி முடிவு.

## காட்சி III.

## மதனவல்லி நந்தவனத்தில் பந்தாடுதல் அதைக் குறித்து சகிகள் பாடுதல்.

அந்தமிகு மதனவல்லி தஞ்சைவளர் சரபோஜி யண்ணன்மீதே
சந்தமுறுங் கவிப்புலவ ருரைத்தபுகழ்க் கவிகடமைத்
தடங்கொள் வீணைத்
தந்திரியி னுறப்பாடிச் செங்கைவளை கலகலெனத் தனது
கொங்கைச்
சுந்தரங்கொள் கந்துகத்தை யெடுத்தடித்து விளையாடத்
தொடங்கி னாளே
ஏந்தெழிளார் மதனவல்லி யெடித்தடிக்குங் கந்துகமேந்
திழையார் முன்னம்
கூந்தலினை யவிழ்த்தாடை நெகிழ்ந்துமணி வடஞ்சிதறச்
கொங்கை சேர்ந்து
காந்தனியற் றிடுஞ்செய்கை செய்தல்கண்டு வெட்கியதைக்
கைவிட் டாங்கே
வாய்ந்தநெடு வீதியுற்றாள் சரபநரேந் திரன்பவனி
வரல்கண் டாளே

## சகிகள் பாட்டு முடிந்ததும், தூரத்தே மோகினி வருவதைக்கண்டு அவளை வர்ணித்தல்.

### சகிகள் பாட்டு

ராகம் - சௌராஷ்டிரம்] [தாளம் - மிச்ரம்

பல்லவி.

மோகினி வந்தாள் அதிரூப
மோகினி வந்தாள்

### தீர்மானம்.

தாம் - தீத்தாம் - தாம் - தெய் - தா — தெய் - தெய்
தாம் - தீத்தாம் - தாம் - தெய் - தத்தெய் - தெய்
தந் - தக - தக - தக - தக - தீந் - திகி - திகி - திகி - திகி
தக - தக - தக - திகி - திகி - திகி - தளாங்கு தகதிக
ததிங்கிணதோம் (மோகினி)

### அனுபல்லவி.

வாகு பெறுமுயர் தஞ்சைச் சரபோஜி
மன்னர் தமைக்கண்டு முன்ன மயல்கொண்ட (மோகி)

### சரணங்கள்.

பணிமதி நுதலில் வசிகர திலகமுன்
முணவ ரருமன முருக வொளிதர
கனதன மருவு தரள மணிவட
மலேயி னிழிதரு மருவி தனைநிகரவே (மோகினி)

மகர மிலகிய துவச னிரதியெனும்
வடிவ வனிதையி னதிக மிவளென
அகமதி லெணியடி மயிலே குயிலே
அடிமை வருவனெனப் பிறகே தொடர்ந்திடவே
(மோகினி)

கமலே யிவளென வுருவசி யெனநீள்
கயல்விழி மேனகை யாமிவ ளெனவே
அமரர் மெச்சுதி லோத்தமை யெனவந்
தவனியி னுலவு மொருமின லெனவே (மோகினி)

### சேடிகள் விருத்தம்.

தங்குபெருந் திறல்வீரர் சேனேக்கா வலர்களொடு
தானு மோர்பால்
மங்கையர்சே னுபதியாய்ச் சேவித்து வருமதனன்
மதன வல்லி

எங்களுயர் தஞ்சைநகர்ச் சரபோஜி மன்னவன்ற
னெழிலை நோக்கித்
துங்கமனத் திடைக்காதல் கொண்டிடுமுன் மலர்வாளி
சொரிந்திட் டானே.

---

## மோகினி விரகதாபத்துடன் பிரவேசிக்கிறாள்.

மகாராஜாவைக் கண்டு மோகித்த மோகினி மன்மத பாணத்தினால் வருந்துகிறதைக் கண்டு சகிமார்கள் அவளுக்கு சீதளோபசாரஞ் செய்தார்கள்.

---

### சகிகள் விருத்தம்.

மதனன்விடு மலர்க்கணையாற் றுயரமேவும்
மதனவல்லி தனைச்சூழ்ந்தோர் மனைக்குட் சேர்த்து
விதமுறுநல் விளவாழைக் குருத்தைப் பாய்மேல்
விரித்ததினிற் படுக்கவைத்துப் பனிநீர் தொட்டு
வதனமதைத் துடைத்திலகு துகிலாற் காற்று
வரவீசிச் சிறிதறிவு தோற்றச் செய்தார்
இதமுறுசீர்ச் சரபோஜி மன்னன் றஞ்சை
யிடத்திலவள் காமனைப்பார்த் திதுசொல்வாளே.

---

### தீர்மானம்.

தத்தோங்கா - ததிமி-தகிடதக - தகததிங்கிணதோம்
தகதோங்கா - ததிமிதகிடதக - தகததிங்கிணதோம்
தத்தோங்கா - தகதோங்கா - தத்தோங்கா
தகதோங்கா - தக்கிறுது - ததிங்கிணதோம்.

## சகிகள் போகிறார்கள்.

---

## மோகினி விரக வேதனையால் மன்மதனைக் குறித்து பாடல்

### கண்ணிகள் மன்மதோ பாலம் பனம்.

ராகம்—பந்துவராளி] [தாளம்—மிஸ்ரம்

பிரபவனுகிப் பிரஜோற்பத்தி செய்கின்ற
மன்மதா—இன்று
பேதையென் றென்னைப் பரிதாபி யாக்கலென்
மன்மதா
பரவுங் கடலினைத் துந்துபி யாக்கொண்ட
மன்மதா—நீயும்
பரவைமார் களுக்குவி ரோதியா யினதென்ன
மன்மதா
வானின்மேற் கோடுந்துன் மதியைக் குடையாக்கி
மன்மதா—காற்றும்
வடக்கோடுந் தேர்கொண்டா யிதுவென்ன காலயுத்தி
மன்மதா
மீனகே தனத்தினல் விஜயம் பெறலாமோ
மன்மதா—யார்க்கும்
விகுருதியா காதிருந்தான் மிகவும் ஜயமாமே
மன்மதா
தேனுர் மலரம்பா லானந்த மடைகின்றாய்
மன்மதா—சீறும்
திறவம்பொன் றுளதாயிற் பிரமாதி யாவையே
மன்மதா
மானேர் கரமுற்ற ஈசுவரன் முன்னுளின்
மன்மதா—உன்னை
வாட்டிய காலையிற் காட்டுங் குரோதியல்லை
மன்மதா

தெரியுமிவ் வுலகத்தி லேவர்கி லகத்தினுல்
மன்மதா—என்மேல்
சித்திர பானுவைப்போன் மெத்தவுங் காய்கிறுய்
மன்மதா
சரபோஜி மகராஜர் தமைநான் மருவச்செய்
மன்மதா—நீ
சருவஜித் தாகிமே லக்ஷய னுகுவாய்
மன்மதா.

---

ஸ்வரம்.

ச, க்கரி கமா, கரிநி, சரிகமபா,
பாம, கமதாம, கரிநி, சரிகரீ, கமபகா
மபதநிசா, நிதபமாகரி, சரிகாம.

(பிரபவ)

---

பிறகு மோகினி சந்திரனைப் பார்த்து பாடுகிறுள்.

---

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

ஒண்முகில்போ னுதவுசர போஜி மன்னன்
உள்ளமகிழ்ந் துறைதஞ்சை பிடத்துமேவும்
தண்ணறுங்கோங் கரும்பென்னக் கமல மென்னத்
தகுமகுட மெனச்செம்பொற் கும்ப மென்ன
வண்ணமலை யெனமுளைத்துப் பணைத்தெழுந்து
வயங்குமணி வடஞ்சுமந்து நெருங்குங் கொங்கைப்
பெண்ணமுத மனையவள்விண் மதியை நோக்கிப்
பேசுவா ளிந்தவகை யேசு வாளே.

---

## மோகினி சந்திரனைப் பார்த்து பாட்டு.

ராகம்—ஆகிரி] கண்ணிகள். [தாளம்—மிச்ரம்

மதனன் குடையாகி மடவாரை வாட்டவந்த
மதியே—உனக்கோர்
மதியிருந்தா லல்லவோ வறிவாயிப் போதுநீ
மதியே.

### தீர்மானம்

தந், தந், தந், தந், தந், தந், தந், தந், தந், தந், தந், தந், தந், தந், தா
தந், தக, தக, தக, தக, தக
திந், திகி, திகி, திகி, திகி, திகி,
தளாங்கு தகதிகி ததிங்கிணதோம்
திந், திந், திந், திந், திந், திந், திந், திந், திந், திந், திந், திந், திந்,
திந், தெய்
திந், திகி, திகி, திகி, திகி, திகி,
தளாங்கு தகதிகி ததிங்கிணதோம்
தந், தந், தந், தந், தந், தந், தந், தா,
தக ததிங்கிணதோம்
திந், திந், திந், திந், திந், திந், திந், தெய்
திகி ததிங்கிணதோம்
தந், தக, தக, தாஹா—திந், திகி, திகி தீஹீ
தந், தக, தக, திந், திகி, திகி
தளாங்குதகதிகி ததிங்கிணதோம்

அதிரூப வாணென்றும் பெண்ணென்று முனைச்சொல்வார்
மதியே—பார்த்தால்
ஆணல்லே பெண்ணல்லே யலியா யிருக்கின்றாய்
மதியே

சதுரனீ யென்றுரைத்தார் விருத்தனு யிருக்கின்றாய்
சசியே—பாம்பின்
தன்வாய்ப் படுந்துயரஞ் சற்று நினைக்கிலையே
சசியே
அதன்ம மெவர்க்காகு மதுநின்னிடத்துளதால்
சசியே—தெய்வம்
அந்தரத்தில் விட்டதுன்னை யிந்தவா றலைந்திடென்று
சசியே
மருவவென்னை மயக்கியுன் வசஞ்செயப் பார்க்கிறாயோ
இந்துவே—தேவர்
மந்திரியின் மனையாளால் வந்த குறை போதாதோ
இந்துவே
உருவிற் கறுப்பையிந்த வுலகமா னென்றல்பொய்
இந்துவே—உனக்
குள்ளக் கறுப்பல்லவோ மெள்ளமே லுதித்ததிங்கு
இந்துவே
அரிவையோ டுதித்தும்பெண் ணருமை யறிந்திலையே
வெண்ணிலாவே—எண்ணின்
அதுவுமல் லாதுனக் கெதிரல்ல வேநானும்
வெண்ணிலாவே
இருநிலம் போற்றுந்தஞ்சை சரபோஜி மன்னருடன்
வெண்ணிலாவே—நானே
இருந்திடுவே னங்கேவா விருந்திடு வே னுனக்கு
வெண்ணிலாவே

---

ஸ்வரம்.

காம பத, கப, மப, கம கா ரி சா, சப,
பாமு, மகரிசா
சகாம, பநி பநீ சரி, சநி நிசா, நித,
நிதா பம கரிச

---

## மதனவல்லி தென்றலைக் குறித்துச் சொல்லுகிறாள்

வெண்பா.

வென்றி மதவேளை விண்மதியை நோக்கிமனம்
கன்றி வெறுத்துரைத்த காரிகையாள் — பின் றொடொர்ந்து
தென்றலை நோக்கித் தியங்கி யுரைக்கின்றாள்
என்றனைநீ வாட்டுதலே னென்று

## மதனவல்லி தென்றலை குறித்து.

பாட்டு.

ராகம் - காம்போதி] கண்ணிகள். [தாளம் - ஆதி

கந்தமிகுஞ் சந்தமல யந்தனி லிருந்து வந்தாய்
தென்றலே—தமிழ்க்
காரிகையின் சீர்மையுறு நேர்மையறி யாததென்னே
தென்றலே

தீர்மானம்.

தீந்த, தத்த, தீந்த, தத்த
தீந்தத்த, தீந்தத்த, தீந்த, தீந்தரிகிடதக
தக ததிங்கிணதோம் தா-தை (2 தடவை)
தீந் தரி கிட தக தக ததிங்கிணதோம்
தா - கிட தக தை
தா தாதாதீ, தாதாதீ, தாதாதீ,
தக ததிங்கிணதோம்
தத் தெய்யா தெய்யா தெய்யா தா தா தாதீ
(ஷி சவுக்க காலம் 4-தரம் மத்தியம காலம் 4-தரம்)
தா தை தளாங்கு தக திகி தக ததிங்கிணதோம்

மந்தமுறு மாருதமாய் முந்தியெல்லா நின்றனையே
தென்றலே—இன்று
மண்டபிர சண்டகுணங் கொண்டுலவி வந்ததென்னே
தென்றலே
வாடையொடு கோடையுமே லாதையுமிங் குன்னைப்போலத்
தென்றலே—வந்து
வருத்தமெதிர் விளைத்திடலை, பொருத்தருமுன் கண்டதில்லை
தென்றலே
நீடுதிரைக் கடலொலிக்குங் குயிலிசைக்கும் பரிதவிப்பேன்
தென்றலே—இங்கு
நீயுமொரு வாதமதாய் மோதுமிதை யேதுசொல்வேன்
தென்றலே
ஒருகுணத்தின், மருவிலைநீ, பிரிவிலவர்க் கமுதாவாய்
தென்றலே—பிரிந்தோர்க்
கோங்குவிட மாகிமய லாங்குறவே தீங்குசெய்வாய்
தென்றலே
விரவுதழல் சொரிவதுன்றன் மருவியற்கைக் குணந்தானோ
தென்றலே—பொதியம்
மேவுசந்த னடவியிற் சூழரவின் றீவிடமோ
தென்றலே
மருவிமுன்பு கந்தவகன் மதனன் வா கனமானுய்
தென்றலே—இன்று
வன்னிவக னயினைமேற் கன்னிவா கனமுமாவாய்
தென்றலே
சரபோஜி மன்னரென்னை மருவுவார் நாளைக்குத்
தென்றலே—அங்கே
சார்ந்திளைப்புத் தீர்ந்திடலாம் போந்திடுகிப் போதினி நீ
தென்றலே

---

ஸ்வரம்.

பா் த பாத பமா ப - கா ம ப தா - ம பா த நி தா் ச நி
தபம - பா
ம ப த நி தா - சநி தா - ரிசநி பாத - சா நி த மா த
மா க சா - ரி க ம ப த (கந்த)

---

## மதனவல்லி குயிலையும் மாலைப் பொழுதையும் நோக்கிப் பாடுகிருள்.

---

ராகம்—சங்கராபரணம்.] கண்ணிகள். [தாளம்—மிஸ்ரம்

ஏற்ற மன்மதன் காளமே—இன்று
எனக்கு நீயொரு காளமே
போற்றி டந்திமுன் மாலையே—மிகப்
போதச் செய்வதென் மாலையே
தோற்று சோலைநல் லலர்களே—கூடித்
தூற்று வார்சில ரலர்களே
ஆற்றல் கொண்டிரை வேலையே—மாதர்க்
கல்லல் செய்வதுன் வேலையே
ஓத வேலையுள மச்சமே—மிக
உற்ற தென்றுமுள மச்சமே
மீது சென்றிடு வங்கமே—நின்று
மெலியு மென்வடி வங்கமே
கோதில் மாதவள வன்னமே—இங்குக்
கொண்டி லேனீவள வன்னமே
மாதன் போதுறு காசையே—சரப
மன்னர் மேலெனக் காசையே

ஸ்வரம்.

பா ரிகம ப மக ரிச நிசா—பதநிச—நிசரிகம—பா
பமக மபத–நிச நிபத நிசரி-சா நிதப-பாமகரி-சநி தநி
(ஏற்ற மன்மதன்)

## வெகுநேரமாகியும் சகிகள் வராமையைக் குறித்து மோகினி துயருறல்.

### எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

மன்மதனே வெண்மதியே தென்றலேபார்
விளக்கடலே கடற்கறையே குயிலே காவே
என்றிவற்றை நோக்கிமிக வெறுத்துப்பேசும்
எழின்மதன வல்லியுயர் தஞ்சை மேவும்
மன்னர்பிரான் சரபோஜி மன்ன ரென்னும்
மணாளருக்கென் செய்தியெலாம் வகுத்துக் கூற
இன்னகைதோற் றிடுஞ்சகியை வரக்கா ணேமென்
றெண்ணின ளவளுமெதிர் நண்ணி னாளே

### சகிகள் பிரவேசம்.

பாட்டு.

ராகம் - சாவேரி] பல்லவி. [தாளம் - ஆதி

சகிவந்தாளையா மதனவல்லிக் கிசைந்த
சகிவந்தாளேய்யா

தீர்மானம்.

தா, தா, தா, தா, தீ, தகதண, தகஜொணு, தாகத தாதி,
ததிமி தகிட தக, தக ததிங்கிணதோம்

தக்கத்தா, தா, தாதீ, தகதண, தகஜொணு, தாகத, தாதி
ததிமி தகிட தக, தக ததிங்கிணதோம்
தா தா தா தா தீ, தக ததிங்கிணதோம்
தக்கத்தா தா தாதீ, தக ததிங்கிணதோம்
தா தா தித் தித் தெய் தக்கத்தா தித்தித் தெய்
தந் தக தக தக, திந் திகி திகி திகி
தக தக திகி திகி தக ததிங்கிணதோம் (சகிவந்தாளையா)

அனுபல்லவி.

மகிதலம் போற்றிடுஞ் சரபோஜி மன்னவன்
மருவு முயர்தஞ்சை நகர மிதுதன்னில் (சகி)

சரணங்கள்.

கலீர்கலீ ரென்னச் சிலம்புக ளார்க்கக்
கடுநடை யுடனே மலர்முகம் வேர்க்கப்
பலபல பெண்களங் கேநின்று பார்க்கப்
பக்ஷமா மதனவல்லி மனத்துயர் தீர்க்கச் (சகி)

சரசமா கக்கூடி விளையாடப் பண்டு
சரபோஜி மகராஜர் தயவுனக் குண்டு
பரவச மாயழைத்து வருகின்றேன் கண்டு
பயந்திடா தேயன்று திடஞ்சொல்லிக் கொண்டு (சகி)

---

## வந்த சகியைப்பார்த்து மோகினி வசனம்.

---

**மோகினி:—** சகியே! மதனனுல் வாடும் என்னை இவ்விதம் தனியே விட்டுச் செல்வது உங்களுக் கழகா.

உடன் மோகினி பாட்டு.

ராகம் - நாதநாமக்கிரியை] பல்லவி. [தாளம் - ஆதி

மதன்கல கத்திலென்னைத் தனியிங்கே வைத்தென்ன
விதமாகப் புறஞ்சென்று யடிநீ சகியே (மதன்)

### தீர்மானம்.

தா, தரித தணதா, தணத ஜொணுதா,
ஜொணுத திமி, தா தா தீ
தா, தரித தணதா, தணத ஜொணுதா,
ஜொணுத திமி, தா தா தீ
தா, தணு தாஜொணு, தாதிமி, தாகிட
தா, தணு தா ஜொணு, தாதிமி, தாகிட (துரிதகாலம்)
தத்தித்தா, க்ருதக, ததிங்கிணதோம் (மதன்)

### அனுபல்லவி.

கதியெனக் குன்னையல்லாற் காணேனே வேறுநான்
அதுதானுன் மனமறி யாததோ சகியே (மதன்)

### சரணம்.

சரபோஜி மகராஜர் பவனிதன் னைக்கண்டேன்
மருவனா னவர்மேல் மால்கொண்டேன் சகியே
பருவ மடந்தையர் பலர்நின்று ரெனைப்போல்
ஒருவரு மயல்கொள்ளக் காணேனே சகியே (மதன்)

---

## மோகினி பின்னும் அந்த சகியைப்பார்த்து ஸ்ரீ சரபேந்திர பூபதியிடம் தூது போகுமாறு வேண்டுகிறுள்.

---

மோகினி வசனம்:— பிரிய சகியே! உங்களில் யாராவது ஒருவராவது துணிந்து அந்த மகாராஜாவிடம் சென்று என் விரக வேதனையைத் தெரிவிக்கலாகாதா!

சுற்றிலும் பார்த்து ஒருவரும் பேசாதிருத்தலைக் கண்டு ஒரு சகியைப் பார்த்து.

பாட்டு.

ராகம் - கல்யாணி] பல்லவி. [தாளம் - ஆதி

இந்தமட்டுஞ் செய்யடி சகியே நீ
இந்தமட்டுஞ் செய்யடி

அனுபல்லவி.

சந்ததம் வளருந்தஞ்சைச் சரபோஜி மன்னர்தம் பால்
சார்ந்தென் விரகமெல்லா மோர்ந்திடச்
சொல்லவேண்டும் (இந்த)

மோகினி வசனம்:— பிரிய சகிகாள் ! எனக்காக இந்த உபகாரமாவது நீங்கள் செய்யக்கூடாதா ?

சகி 1 வசனம்:— அம்மா அந்தவேலை எங்களால் முடியாது.

சரணம். 1

அவருக் கெனைப்போலு மடந்தையா ரொருக்காலே
அறியாமன் மயல்கொண்டேன் சிறியாளா கையினலே
கவலையுற் றிடமத னெறிகிருன் மலர்க்கோலே
கருது மிதையவர்க் குரைநடந் தனம்போலே (இந்த)

மோகினி வசனம்:— அடி பாங்கிகாள் ! சிறியாளாகிய நான் அவர்மேல் மையல்கொண்டு நான் படும் மன்மதாவஸ்தையை அவரிடம் தெரிவிக்கலாகாதா ?

சகி 2 வசனம்:— மதனவல்லி இந்த வேலையைவிட்டு வேறு எது சொன்னலும் நாங்கள் செய்கிறேம்.

சரணம். 2

தென்றலம் புலிகட்கென் செய்தேனு னபசாரம்
தெரிக்கு மவைசெய்வ தேதிப் படிகோரம்
நன்றவர்க் கிவையெல்லாம் நவிலுவா யிந்நேரம்
நாமிரு வருமிருந்த நன்மைக்கிங் குபகாரம் (இந்த)

மோகினி வசனம்:— ஐயோ! நான்படும் வேதனையை சற்றும் அறியாது இந்தத்தென்றலும் சந்திரனும் என்னை வாட்டுகிறார்களே. அடி சகிகாள்! (ஒரு சகியின் முகவாய்க்கட்டையைப் பிடிக்க சகி தூர விலகல்).

---

சரணம். 3

மனத்தினைத் தூதுவிட்டே னதன்செய்தி யோராமல்
மகிழ்ந்தவ ரிடத்தி லிருந்தது வாராமல்
அனத்தினை யனுப்பலா மதுசொல்லுஞ் சேராமல்
அதுநிற்க நீயேசெல் வருத்தத்தைப் பாராமல் (இந்த)

மோகினி வசனம்:— தோழிகாள்! நான் தூதாக விடுத்தவை யெல்லாம் அவரிடம் போய்ச் சேராமலே போய்விட்டது. நீங்களாவது வருத்தத்தைப் பாராமல் சென்று வரலாகாதா?

சகி 3-4 வசனம்:— அம்மா! ராஜசபைய்யை அணுகி உங்களுடைய விஷயத்தை எவ்விதம் தெரிவிப்போம்; எங்களால் முடியாது.

மோகினி வசன்ம்:— அடி சகிகாள்! அங்கு போகும் வகையையும் சொல்லும் வகையையும் நான் தெரிவிக்கின்றேன். மேலும் இந்த ஆபரணாதிகளை யெல்லாம் உங்களுக்குக் கொடுக்கிறேன் சற்றே தயவு செய்யுங்கள்.

சகிகள் சம்மதித்ததைப் போல் பேசாமலிருக்க அதைக் கண்டு மகிழ்ந்த மதனவல்லி சந்தோஷத்துடன் பாடுகிருள்.

ராகம்—தோடி] [தாளம்—மிச்ரம்

பல்லவி

சொல்லும் வகையெல்லா முறையா யுனக்குநான்
சொல்லுகின் றேனடி தேனே.

அனுபல்லவி

வல்லோர் புகழ்தஞ்சைச் சரபோஜி மகராஜர்
மனத்துக் கிசைந்திடுந் தூதுநீ யினிதாகச் (சொல்லும்)

சரணங்கள்

செஞ்சுட ருதிக்குமுன் னெழுந்து புனல் படிந்து
திருநீறணிந்து ருத்ராக்ஷ மணி பூண்டு
நெஞ்சினி லெழுமன்பி னெடுசந்தி வந்தனம்
நிலைதரு சிவபூஜை புரிகுவ ருடனுண்டு (சொல்லும்)

விஞ்சை தருவேத புராணங்க ளோதிடுவோர்
விருப்புடன் பெரியோர்பா லிருப்பார்கேள் வியினீண்டு
கஞ்சமலர்த் தாரினர்க்குஞ் செம்பொன்முதற் ருனங்கள்
கனக்கவே செய்வரிந்தக் காலங்களிற் கூருதே (சொல்லும்)

மச்சங்கொங் கணமீழ மலையாளஞ் சாளுவம்
வங்காளந் துலுக்காண மராடஞ்சீ னத்தோடு
கொச்சி முதலான தேசமன் னவர்வந்து
கூடிப் பணிந்துநிற்குஞ் சமயத்தி லுரையாதே (சொல்லும்)

மெச்சுமதி மந்திரிமார் தளகர்த்தர் முதலான
மேலோர்தஞ் செய்கைசொல்லி வினவுங்காற் பகராதே

கச்சணி முலைமாதர் நடனஞ்செய் வேளையிலும்
கவிவாணர் பிரசங்கஞ் செய்போதும் புகலாதே (சொல்லும்)

நீலத் தடங்கண்மாதர் தூதுக ளங்கங்கே
நீள்கடை தோறுநிற்குஞ் சமயம்பார்த் தன்பாலே
சாலப் பெருஞ்சேனை சூழப் பவனிவரத்
தாம்வரு மகராஜர் சபையதன் முன்பாலே (சொல்லும்)

பாலுற்றிடும் போதவ் வாசற் புறநின்று
பணிந்துரைத் தாலது பலித்திடு நம்பாலே
மாலுற்ற துவும்நான் மேலுற்ற துஞ்சொல்லி
மாலைகைக் கொண்டிங்கு வந்திடு கென்பாலே (சொல்லும்)

**மோகினி வசனம்:—** சகிகாள் சகல சாஸ்திர சம்பன்னரும் சகல தேசத்தரசர்களும் மந்திரி பிரதானிகளும் சூழ சிம்மாசனத்தில் வீற்றிருந்து அரசு செலுத்தும் அச்சரப நரேந்திர பூபதியை வாசலில் காத்திருந்து பணிந்துரைத்தாவது என் குறையைத் தீர்க்கும்படி கேட்டுக்கொள்ளுங்கள்.

**சகிகள் வசனம்:—** அம்மா மதனவல்லி ஏதோ எங்களால் கூடிய வரையில் சென்று முயன்று பார்க்கிறோம்.

**சகிகள் செல்ல மோகினியும் செல்லல்.**

காட்சி முடிவு.

---

## காட்சி IV.

## மோகினி அந்தப்புரத்தில் மோகினி தூது சென்றவள் வரவில்லையே என்று ஏக்கமுற்றிருக்கும்போது ஒரு சகி பிரவேசிக்கிருள்.

---

**சகி விருத்தம் — எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.**

சொன்னவிந்த வகையெல்லா மதனவல்லி
சொல்லி யந்தப் பாங்கிதனை விடுத்தா ளந்த

மின்னிடையாள் மதயானைக் குலஞ்சூழ் தஞ்சை
வீதிதனிற் பிடியெனவே நடந்தாங் கெய்தி
மன்னர்பிரான் சரபோஜி மன்னன் றன்பால்
வருத்துரைக்குஞ் சமயமெதிர் பார்த்து நின்றாள்
அன்னதற்கு ளவளவளை வரக்கா ணேனென்
றுற்றுமற் சிலசொற்க ளறைகின்றாளே

## உடன் மதனவல்லி பாட்டு.

ராகம்—அட்டாணு] [தாளம்—மிச்ரம்

பல்லவி

இன்னும் வரக்காணேனே சகியைநான்
இன்னும் வரக்காணேனே

அனுபல்லவி

மன்னர் புகழுந்தென் றஞ்சைச் சரபோஜி
மன்னன்பாற் றூதுசென்ற கன்னிகை தனையிங்கே
(இன்னும்)

சரணங்கள்

பாவாயென் றேனிங்குப் பாவாயென் றாளந்தப்
பாவிக்கென் னாவி பதைப்புத் தெரியாதே
கார்வாய்க் குயிலனங் கூவி வதைக்குது
காமன் கணையென்மே லோவா துதைக்குதி
(இன்னும்)

பாலனஞ் செய்திடன் பாலன் மேயென்றேன்
பாலனங் கொண்டுநின் பால்வரு வேனென்று
மேலகன் றாள்மதி தாமதி யாள்சொல்லும்
வேலை தெரிந்துநிற்பாள் போல விருக்குது (இன்னும்)

சகியேயென் றேன்சற்றுச் சகியேயென் றாளவள்வஞ்
சகியேயிப் படியென்னைத் தவிக்கவிட்டுச் சென்றாள்
மகிபாலன் சாபோஜி மன்னன் றனக்கிசைந்தால்
வருவான் வரச்சொல்வான் மாலையா கிலுங்கொடுப்பான்
(இன்னும்)

---

சகி வசனம்:— மதனவல்லி போனவள் வருமுன்னம் நீ இவ்வாறு வேதனையடைவது உனக்கழகாகாது எப்படியும் அவள் உன்மனோபீஷ்டம் பூர்த்தியாகும் மார்க்கம் தேடியே திரும்புவாள் வருந்தாதே

மோகினி வசனம்:— சகியே! காமன் கணையால் வருந்தும் என் வருத்தத்தை அவரறிய சொல்லி இணங்கச் செய்குவாளோ ஏதோ தெரியவில்லையடி.

சகி வசனம்:— அம்மா யாதொன்றுக்கும் கவலைப்படவேண்டாம். போனவள் ஜெயத்துடனே திரும்புவாள். வா. நாம் செல்லுவோம்.

இருவரும் உள்ளே செல்ல

காட்சி முடிவு.

---

## காட்சி — V.

## குறத்தி பிரவேசம்.

---

குறத்தியின் வர்ணனை நேரிசை ஆசிரியப்பா.

இப்படி யிவர்க ளிருந்திடு காலையில்
மைப்படி விழியளோர் மலைக்குற மடந்தை
மும்மதக் களிற்றின் முகபடா மென்ன
வெம்முலைத் தடத்தின் மேற்கச் சணிந்து
மதன்கொலு மண்டபம் வளைத்திடு திரைபோல்
விதமுறு சித்திர மென்றுகி லுடுத்துப்

பிரியலென் றவ்வேள் பிடித்தகை விரல்கள்போல்
மருவிடு முன்கை மணிவளை வளைந்து
சந்திர னிரண்டெனத் தந்திவெண் கோட்டுச்
சுந்தரத் தோடு தொகுசெவி யணிந்து
குன்றிமா மணியுங் குலச்சங்கு மணியும்
துன்றிடு கவடியுந் தொகுத்திடு பணிகளும்
புலிப்பற் றாலியும் புனைந்துமாத் திரைக்கோல்
வலக்கையி லேந்தி மணிக்குறக் கூடை
மருங்கினி லிடுக்கி வசிசரத் திலகம்
இருங்கதிர் நெற்றி யிடைத்தரித் தெய்தி
சீருறு பொருளாற் றிடத்தினுற் றணக்கு
நேரிலா தோங்கிய நேரிமா மலையும்
ஞாலந் தன்னி னண்ணிடு முயிர்க்கெலாம்
காலமோர்ந் துதவுங் காவிரி நதியும்
பொன்னுல கென்னப் புவிபுகழ் சிறப்பு
மன்னிய சோழ வளநா டதுவும்
சக்கர வாளமுந் தகுபுறக் கடலும்
இக்குவ லயத்தை யினிதுசூழ்ந் திடுதல்போல்
கார்வளர் மதிலும் நீர்நிறை யகழியும்
மஞ்சுறச் சூலவும் தஞ்சைமா நகரும்
பற்றலர் குழுவைப் பகர்புறத் தொதுக்கி
வெற்றிகொண் டிலகும் வெற்றிமா விகையும்
உச்சையிச் சரவமா முயர்பரி யென்ன
விச்சையி னெறிவின் மிகுபரித் திரளும்
நிலவுமெண் டிசையினு நிலவுறு மிபங்கள்போல்
குலவிடு முன்றில்சூழ் குஞ்சரக் குலங்களும்
பூமிவா ழரசர் பொருந்துசீ ரெவற்றினும்
நாமுயர் வினமென நாட்டிய பதாகையும்
மன்றல்பே ருதவி வலனுறு வெற்றியால்
முன்றிலின் முழங்கு மூவகை முரசும்

மானமுற் றிலங்கு மனுநூன் முறையே
நானிலந் துதிக்க நடத்துசெங் கோலும்
பிரகதி சுரர்தம் பேரரு ளாற்பெறு
சரபோஜி மன்னர் தமையெதிர் போற்றி
அன்னவ ருதவிய வளவில்பொற் பணிகளும்
மன்னெழிற் கலைகளும் வரிசையாக் கொண்டே
ஆவணஞ் சந்நதிக ளணிநெடு வீதிகள்
மேவியங் கிருக்கு மின்னனா ரெவர்க்கும்
கையினிற் காலிற் கலந்திடு ரேகையும்
மெய்யுறு மறுவொடு விளங்கிடு தழும்பும்
சுழிகளு மின்னுந் தோற்றுசில் குறிகளும்
விழியினா னோக்கி மெய்ப்பல னுரைத்திட்
டவரவ ருதவிடு மணிகளுங் கலைகளும்
குவிதரு நிதியுங் கொடுவர வன்னாள்
குறிப்புவரு நெறிப்புமொழி முறுக்குமதி லுருக்குநிறை
களிப்புமிசை நெளிப்புமியல் பசப்புமுலை யசைப்பு
மெதிர்
கண்டிளைஞ ரானவர்கண் மண்டியரு கேயுலவ
கெண்டைவிழி யாயொருசொ னின்றுசொல டியுரிய
தொண்டரல வோவெளிய மின்பமுற வேபுகலும்
உனது மனமறிய மனது பதறுதடி
எனமு னவிலமிக வவளு நலதுபினர்
வந்துசொலு வேனதுங்கள் சிந்தைமகிழ் கூறவிங்கு
நின்றிடுக நின்றிடுக வென்றுரைசெய் தந்தமிகு
கயலிரண் டிலகு கலைமதி தன்மேல்
புயல்புறஞ் சூழப் பூத்ததோர் கொடியோ
புவியினில் வந்து பூண்பல புனைந்து
நவிலனம்போல் நடந்திடு மின்னோ
இரதியோ வரம்பையோ வெழிலூர் வசியோ
திருவெனு மடந்தையோ திலோத்தமை தானோ

என்னவொண் ணுதலா ரியல்கண நடுவே
மன்னிவீற் றிருக்கு மதன வல்லிதன்
பொன்மனைக் கெதிருறப் பொற்பு
மன்னிடு மறுகினில் வந்தணைந் தனளே.

---

## குறத்தி வருதலை தலைவிக்கு பாங்கிகள் தெரிவிக்கின்றனர்.

---

ராகம் - பியாகடை]　　பல்லவி　　[தாளம் - ஆதி

குறத்தி வருகிறாளம்மா குறி சொல்லும்
குறத்தி வருகிறாளம்மா

### தீர்மானம்

தீனுத, தத்திமி, தாகதஜம், ததஜம், கிட,தகஜம்,
தகணக, தகஜொணு தாகததாதி, ததிமிதகிடதக
தா கத தாதி, தத்தீனு ததிமி, தா கத தாதி,
தக தீனுததிமி, தா கத தாதி, தத்ணுங்குடு, தித்ணுங்குடு
தத்தளாங்குடுதோம், தித்தளாங்குடுதோம்,
தாங்குடு, தாங்குடு, தாஹா, தீங்குடு, தீங்குடு, தீஹீ
தாங்குடு, தாங்குடு, தீங்குடு, தீங்குடு,
தகததிங்கிணதோம்　(குறத்தி)

### அனுபல்லவி

பொறுத்த புகழ்த்தஞ்சை புரத்தின் வளர்சர
போஜி நரபதி மேவு மெழில்கண்டு
திறத்தின் மிகுமயல் பரித்த சிலைநுதல்
கறுத்த கயல்விழிச் சிறுத்த கொடியிடை　(குறத்தி)

சரணங்கள்

தங்கக் குடமன கொங்கைத் துணைகளிற்
சந்தக் களப மிலங்கவே
சங்கக் குலவளை செங்கைப் புதுமலர்
தங்கிக் கலினென் றலங்கவே
சிங்கத் துவளிடை பொங்குற் றிடுமெழில்
சிந்தித் தெவரு மயங்கவே
கங்குற் கணுமொளிர் கஞ்சப் பதநடைக்
கஞ்சப் பெடைக ளுயங்கவே (குறத்தி)

கன்ன மதிலணி பொன்னி னுறுகுழை
மின்னு மொளிவுற மின்னவே
வன்ன நறுமலர் நண்ணு குழலெழில்
மன்னு மதனடி பின்னவே
பன்னு குழன்மிசை யண்ணலளிகுலம்
முன்னு மிசையெதிர் துன்னவே
அன்ன எடிபுனை சொன்ன பரிபுரம்
இன்னள் பதுமினி யென்னவே (குறத்தி)

மாசு தவிர்பிறை யாசை கொளுநுதல்
ஈசர் மிகிழ்பொடி பூசியே
பாச விளைஞர்க டாச ரெனவுற
மோச விழிவலை வீசியே
கோசு களினியல் வாச முனகுறி
நேச முடனேவி லாசியே
தேசி னுயர்சர போசி யெனுமக
ராச னுறுபுகழ் பேசியே (குறத்தி)

—

## மோகினி குறத்தியை பாங்கியின் மூலம் அழைக்க குறத்தி பிரவேசம்.

### குறத்தி பாட்டு

ராகம்—கௌளிபந்து] பல்லவி [தாளம்—மிஸ்ரம்

குறவஞ்சி வந்தாள் மோகனக்
குறவஞ்சி வந்தாள்

#### அனுபல்லவி

திறமுந் திருவும் செறியு முறைதஞ்சை
செழுநகர்ச் சரபோஜி மகராஜ னருள்பெற்ற (குறவஞ்சி)

### உடன் குறத்தி வசனம்

குறத்தி வசனம்:— கூரமுறங்கற்ற, கூரமுறமில்லையாங்கற்ற, முற மில்லையாங்கற்ற, கூறமுரமில்லையாங்கற்ற

#### சரணங்கள்

தரணியி லெங்கணு மதமொடு சென்று
தண்மலர்க் கணைகொண் டெவரையும் வென்று
வருமத னனேயடா வாய்த்ததோ வின்று
வாவெதி ரொருகை பார்ப்போமிங் கென்று (குறவஞ்சி)

கூடைகட்டலை முறங் கட்டலையோ வென்னக்
குயில்கூவு தல்போலக் கூவிக்கொண் டன்னப்
பேடென்ன நடந்தெழின் மயிலென மின்னப்
பெருமய னுடன்மகிழந் தாடவர் துன்னக் (குறவஞ்சி)

பச்சை குத்தலையோ வடியம்மே பிச்சை
பகர்குறி கேளுங்கள் சொல்கிறேன் விச்சை
இச்சகத் தனைவருங் கேட்பவ ரிச்சை
எனச்சர பேந்திரன் றனைப்போற்றி மெச்சி (குறவஞ்சி)

## சகிகளில் ஒருத்தி குறத்தி வாசல்வளம் கூறப் போவதை எடுத்துரைத்தல்.

### சகி விருத்தம்

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

நண்ணுபுகழ்ச் சரபோஜி மன்னன் றஞ்சை
நகருறையு மதனவல்லி மானே யந்த
வண்ணமலைக் குறத்திதனை யழைத்தி டென்றுள்
வந்துரைத்தாள் சென்றழைத்தாள் வந்து நின்று
விண்ணிடைச்சென் றுடுக்ணத்தைத் துகிற்பதாகை
மேதினிமி லுதிர்க்குமுயர் மனையை நோக்கி
ஒண்ணுதற்சிற் றிடைத்தொடிக்கை யனைய வஞ்சி
உளங்களித்து மணிவாசல் வளஞ்சொல் வாளே

## குறித்தி வாசல் வளம் கூறுதல்.

ராகம்—பாசு] கண்ணிகள் [தாளம்—திச்ரம்

வாசலிது வாசலிது மகராஜன் வாசலிது

### தீர்மானம்

தோதிந்த, தக்க, தோதிந்த, தத்தோம், தத்தோம், தொங்கா,
தகதோம், தொங்கா, தத்தோங்கா, தகதோங்கா,
தளாங்குதோம், ததிங்கிணதோம் (வாசலிது)

### பாட்டு

தேசுறுபோ சலகுலத்தைச் செழிக்கவைக்கும் வாசலிது
(வாசலிது)

நன்னயஞ்சேர் தஞ்சைதனி னலம்பெருகும் வாசலிது
மன்னுசர போஜிமன்னர் மகிழ்ந்திருக்கும் வாசலிது (வாச)

திருமகளு நாமகளுஞ் சிறந்திருக்கும் வாசலிது
வரமுதவும் பெரியோர்கள் வாழ்ந்திசைக்கும் வாசலிது
(வாசலிது)

விதிதரும்வே தாகமங்கள் விளங்குமணி வாசலிது
சதுரங்க சேனைகளுஞ் சந்ததஞ்சூழ் வாசலிது (வாசலிது)

நேசமுறு சேனைகட்கு நிதியளிக்கும் வாசலிது
பூசுரர்க்கும் புலவோர்க்கும் பொன்சொரியும் வாசலிது
இத்தரணி மன்னரெல்லா மிறைஞ்சிநிற்கும் வாசலிது
மொய்த்திடுசீர் மும்முரசு முழங்குமணி வாசலிது
(வாசலிது)

**மோகினி வசனம்:—** ஏ! குறவஞ்சி! எங்கள் ராஜ்யத்தின் சிறப்பும் நீதி தவராமல் அரசு செலுத்தும் எங்களது மகாராஜா ஸ்ரீ சரபேந்திர பூபதியின்

### மோகினி பாட்டு.

**ராகம்—ஸஹாண]** **பல்லவி.** **தாளம்—மிச்சரம்**

வாசல் வளமிங்கே நேசமுடனே சொல்லும்
மடந்தையே நீயாரடி
நேசமுடனே சொல்லும் மடந்தையே நீயார்டி

**அநுபல்லவி.**

தேசமெங் கும்புகழ் வீசு மெழிற்றஞ்சை
வாசன்சர போசிமக ராச னுயர்மனை (வாசல்)

**சரணங்கள்.**

வானுல கத்துறு மேனகை யோவென்று
வையகத் தோரென்ன மறுகுதொறுஞ் சென்று
மானினி யார்கைக் குறிகள் சொல்லியின்று
வடிவமுற்றிடு மடணமமென்மயி லென்முன் வந்துபின்
இனிதுகந்திட (வாசல்)

கனத்திடு குறக்கூடை யெடுக்குமின் னிடையும்
கைவீச் சுடனன்ன மன்மென் னடையும்
சினத்திடும் வேல்கணை யனவிழிக் கடையும்
திருகவாடவர் மனது நாடொறும்
உருகமாமயல் பெருகவந்தெழில் (வாசல்)

மருவிநின் பேரொடு வளர்தேசப் பேரும்
மலைவளத் துடனுங்க ளொருசாதிச் சீரும்
திருவுநீ யறிந்திடு நதிகளு மூரும்
திரமு நீபெறு வரமுமேலத
னுரமு நானெதி ரறிய வோதிடு (வாசல்)

மோகினி வசனம்:— நீ எந்த நாட்டைச் சேர்ந்தவள். நீ எங்கிருந்து வருகிறாய். உன் ஜாதி வளமென்ன தெரிவி கேள்ப்போம்.

குறத்தி வசனம்:— அம்மா ! சொல்லுறேன் கேளுங்கோ.

---

## குறத்தி பாட்டு.

---

ராகம் - சௌராஷ்டிரம்] [தாளம் - மிச்ரம்

பல்லவி

எங்கள் குறச்சாரிவள மெடுத்துரைப்பே னம்மே

அநுபல்லவி

மங்களஞ்சேர் தஞ்சைநகர்ச் சரபநர பாலன்
மகிழ்ச்சியுட னுளுமிந்தப் புவிக்குளுயர் மின்னே (எங்கள்)

சரணங்கள்

மானினெடு பன்றிமரை யொளிவிருந்து கொல்வோம்
வந்தெதிர்த்தோர் தங்களைமேன் மிஞ்சவிடோம் வெல்வோம்
கானகத்திற் கிழங்காணை மருப்பதனுற் கெல்வோம்
கைக்குறிகண் மெய்க்குறிக ளெக்குறியுஞ் சொல்வோம் (எங்)

வரவுமொரு முயலைவிட்டு மதகளிற்றைப் பிடிப்போம்
மணலதனைத் தகவறுத்து வருதைலம் வடிப்போம்
மேவுமவ விடிப்பதுபோ லுரலதனை யிடிப்போம்
மேன்மைதனக் கிழிவுவரின் மிகவதற்குத் துடிப்போம் (எங்)

செந்திருமா லென்றனக்கு மைத்துனன்கா ணம்மே
திங்களணி சிவனெனக்குத் தமையன்முறை யம்மே
அந்தமிகுங் கந்தனெங்கண் மருமகன்கா ணம்மே
அன்னநடை வள்ளியெங்கள் கன்னிகைகா ணம்மே (எங்)

மாமனைமுன் கைப்பிடிப்போங் கொழுந்தனோடு படுப்போம்
வாழுமெங்கள் சாதிமெத்த மானமுள்ள சாதி
நாமமுறு மாமிதனைத் தாயெனவே மதிப்போம்
நாத்தியெனுஞ் சொல்லுரையோம் போற்றிடுவோம் நீதி (எங்)

தீர்மானம்

தினத்தேந்திந, தினத்தேந்திந, தினத்தேந்திந,
தினனு, தின்னனே (ச் சே யம் மே)
தினத்தேந்திந, தினத்தேந்திந, தினத்தேந்திந, தினனு

பாட்டு.

கொச்சிமலை கொரகுமலை யெங்கோ மலைநாரு
பச்சேமலை பவயமலை யெங்கோ மலைநாரு
ஆனைமலை பொன்னுமலை யெங்கோ மலைநாரு
சீராரங்க மலைநாரு யெங்கோ மலைநாரு
கமுகுப்பிலா மாமரங்கோ யெங்கோ மலைநாரு
கதலிதெங்கு கனிமரங்கோ யெங்கோ மலைநாரு
ஆனேகுத்தி விருந்திடுவோ மணிக்குறவர் நாங்கோ
பூனேகுத்தி விருன்றிடுவோம் பூனிக்குறவர் நாங்கோ
ஒற்றேகுற்றி விருன்றிடுவோம் வொற்றைக்குறவர் நாங்கோ
பண்டிகுத்தி விருன்றிடுவோம் பன்றிக்குறவர் நாங்கோ

குறத்தி வசனம்:— ச்சேயம்மே—குறிசொல்

வோம் அம்மே நாங்கோ அருண்ட காருக்குற்

றக்கை போருவோம் அராடே காருக்குக்

குன்று தற்றக்கை போருவோம் அம்மே நாங்கோ

டச்சரெப் பொற்றுக் குற்றுவமம்மே நாங்கோ

சுக்குருணி சாமிக்குப் பொண்குருற்ற சாரியம்மே நாங்கோ

சாரைப்பாம் படிச்சியிங்கிற சாரியம்மே நாங்கோ

யெங்கசாரி மெற்ற மானமுள்ள சாரியம்மே நாங்கோ

கைக்குறி மெய்க்குறி சொல்லுவோமம்மே நாங்கோ

பூனைகுற்றி விருன்றுக்கிற்றிங்கிற சாரியம்மே நாங்கோ

ஓற்றேகுற்றி விருன் றுக்கிற்றிங்கிற சாரியம்மே நாங்கோ

பன்றிகுற்றி விருன் றுக்கிற்றிங்கிற சாரியம்மே நாங்கோ

அணிக்கரி ஆமைக்கரி பூனைக்கரி கோபானன்று

திங்கிற சாரியமே நாங்கோ

மான்மரை பொலுவிருந்து கொல்வோம்மே நாங்கோ

அண்ணனுன்ற குச்சியில் தம்பி யுருவா ரென்று கூறுவோ
மம்மே நாங்கோ

குறத்தி பிள்ளைப்பெற குறவன் காயங் குறிக்கிற சாரியம்மே
நாங்கோ

ச்சேயம்மே வுன்முகத்தில் நல்ல கலையிருக்குரம்மே

ச்சேயம்மே வுன்கையில் நல்ல ரேகையிருக்குரம்மே

ச்சேயம்மே வுன்காலில் நல்ல சரிக்கிரமிருக்குரம்மே

---

## அம்மே இதுவரை சாதிவளம் சொன்னே இனி மலைவளம் சொல்றே கேளு.

## குறத்தி பாட்டு.

---

ராகம்—பைரவி] பல்லவி. [தாளம்—ஆதி

மலைவளஞ் சொல்வேன்கே ளம்மே நானறிந்த

மலைவளஞ் சொல்வேன்கே ளம்மே

அனுபல்லவி.

சிலைவளங்கொள் சரபோஜி மன்னர்தென் றஞ்சைத்
திருநகர் தனில்வாழு மருமலர்க் கோதாய் (மலைவளம்)

சரணங்கள்

மல்லிகார்ச் சுனமெனவோர் விண்டு
மனத்தொன் றதிலெண்ணிக் கொண்டு
மகிழ்ந்தேறி விழுந்தவர்கள் பண்டு
மதித்ததெல் லாமடைவர் கண்டு (மலைவளம்)

சொல்லுமதைப் புகழுமிந்த ஞாலம்
தொகு பணிக்கு மயில்களினீள் சாலம்
தோகைநிழ லுதவியனு கூலம்
தோற்றிடவே யாற்றும் பகற்காலம் (மலைவளம்)

கனமாம் பொதியமலைச் சித்தர்
கருத்தினில் வெகுபரி சுத்தர்
கறைக்கண்டர் தமக்கவர் பத்தர்
காலங்கள் பலகண்ட நித்தர் (மலைவளம்)

தினமுஞ் சிவாகமம் படிப்பார்
சித்தார்த்த மேபெரிதாய் முடிப்பார்
செறிந்திடைம் புலன்களை யடிப்பார்
சிவபதம் நிலைபெறப் பிடிப்பார் (மலைவளம்)

இனுமதி லொருநெல்லி யடுக்கும்
எடுத்தருந் திடின் மூப்பைத்தடுக்கும்
எழி லுறு மிளமையைக் கொடுக்கும்
இமையவ ருணவினைக் கெடுக்கும் (மலைவளம்)

தனுவாய் வளைந்ததொரு வெற்பு
தழலா யெழுந்ததொரு வெற்பு

சலமாய் நிறைந்ததொரு வெற்பு
தனிக்குடை யானதொரு வெற்பு (மலைவளம்)

திருவட னுருமலை வாழும்
தேறிரு கழுகதிற் சூழும்
தெரிசிக்கி னதைப்பிறப் பேழும்
சேர்ந்துமேற் றொடராம லாழும் (மலைவளம்)

தாரணியிற் பலவுள நாகம்
தகுமதி சயங்கள நேகம்
தந்நிகர் சரபோஜி மன்னர்
தஞ்சைக் கணிதரும் வஞ்சி (மலைவளம்)

## மோகினி விருத்தம்.

எண்சீர்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

நிலவுமதி புனைவேணிப் பிரகதீசர்
நிகழ்கருணை யேற்றினிய வரங்கள் பெற்றே
உலகுபுரந் தருள்சரப நிருபர் தஞ்சை
உயர்நகரி லனம்போல நடந்துவந்து
திலகநுதன் மயில்போல நின்று நீடு
சிறந்தபசுங் கிளி போலப் பேசு மின்னே
குலவுமிந்த மலைகளுக்கு ளுனது சொந்தக்
குடிசையெந்த மலையிலதைக் கூறுவாயே

## குறத்தி தன் சொந்த மலையைப்பற்றிக் கூறுகிறாள்.

ராகம்—ஆனந்தபைரவி] பல்லவி. [தாளம்—திச்ரம்

குடிசைவைத்து வாழுமலை கூறுவன்பூங்கொடியே
கோகிலமே யனப்பெடையே குலவு மிளம்பிடியே

சரணங்கள்

தங்கமகா மேருவினிற் றன்குடிசை தொடுத்தோம்
சாபமலை யென்றுரைத்தார் தாபமொடு விடுத்தோம்
சங்கரனூர் கைலைமலை தனிலுறையச் சென்றோம்
தவப்பூத கணங்கள் கண்டோஞ் சிவப்பிரீதியென்றோம் (குடி)

திங்களணி காளத்தி கண்டதனை நயந்தோம்
திண்ணன்கண்ணைப் பறித்ததுமுன் னின்னதென்றார்
பயந்தோம்
அங்குலவு குற்றால மலையினுறப் போனோம்
அருவியின்மூழ் கிடுவிரென்றார் நழுவிவர லானோம் (குடிசை)

எறிவட வேங்கடத்தி லிருக்கவிடம் பார்த்தோம்
இன்னதுமால் கொண்டமலை யென்றுரைத்தார் தீர்த்தோம்
ஏறிஉயர் பழனிமலை யிணிதெனவே குறித்தோம்
இடும்பன்மலை யெனப்புகன்றார் திடங்கொளதை வெறுத்தோம்
(குடிசை)

தூறுமுகில் சூழுமொரு தூயமலை தொட்டம்
தூங்கன்மலை யீங்கிதென்று ராங்கதனை விட்டோம்
கூறுபுகழச் சேரலன்றன் குவடணைந்தோ மப்பால்
கொல்லியிது வென்றுரைத்தார் தள்ளிவந்தோ மிப்பால்
(குடிசை)

விராலிமலை சோலைமலை ஸ்வாமிமலை யம்மே
விளங்குமெங்கள் குலவள்ளிக் குகந்தளித்தோ மம்மே
பிரான்மலையுஞ் சிராமலையும் பிறமலையு மம்மே
பிறைமுடிமேல் வைத்திருக்கும் பிரான்மலைக ளம்மே (குடி)

தராதலம்போற் றிடமேவுந் தஞ்சையிலெந் நாளும்
தங்குசர போஜிமன்னர் சிந்தைமகிழ்ந் தாளும்
புராதனமா மலையாகிப் புகழ்தவத்தோர் முந்தப்
பொருந்திவளர் நேரியெங்கள் சிறந்தமலை யம்மே (குடிசை)

நேரிமலை மேற்குடிசை நிலைக்கவைத்தோ மம்மே
நீடுமது வெங்கள்குடி தழைக்கவைத்த தம்மே
தாரகைகள் போலமுத்தந் தயங்குமதி லம்மே
சந்தமுறு நேரியெங்கள் சொந்தமலை யம்மே (குடிசை)

குறத்தி வசனம்:— அம்மே இன்ன நா போன தலங்களை பத்தி சொல்றே கேளம்மே

---

## குறத்தி தலமகிமை கூறுதல்.

---

ராகம் - அசாவேரி] பல்லவி. [தாளம் - ஆதி

தாரணியி னுனறிந்த தலங்களைக்கே ளம்மே நானறிந்த
தலங்களைக்கே ளம்மே.

அனுபல்லவி.

சீருறுதென் றஞ்சைநகர்ச் சரபோஜி மன்னர்
செழிக்கவருள் சரபேசன் றிரிபுவன மறிவேன்
(தாரணி)

சரணங்கள்.

தேசுதருந் தழன் மலையாய்ச் சிவன்விளங்க மாலும்
திசைமுக னும் பாதமுடி தேடருணை யுடனே
நேசமுட னிமயவல்லி நீடுமொரு மாவின்
நிழலிருந்து தவம்புரியே காம்பரநா னறிவேன் (தாரணி)

குலவுமிரா வணன் கரத்தா லெடுத்தசிவலிங்கம்
கோவினது செவியுருவாங் கோகரணத் துடனே
இலகலுறு வரணையசியிரு நதியின் பேரால்
இசைவார ணசியெனு மெழிற்காசி யறிவேன் (தாரணி)

கனத்தமறக் குலத்தர்சங் கரன்விழியிற்றமது
கண்ணையொடுத் தணிந்ததிருக் காளத்தி யுடனே

சினத்தின்மிகு திரிபுரத்தைக் கணப்பொழுதி லீசன்
சிறுநகைசெய் தெரித்திருக்குந் திருவதிகை யறிவேன்
(தாரணி)

பதஞ்சலியு முயர்புலிக்காற் பண்ணவனுங் காணப்
பரமசிவ னடம்புரியுஞ் சிதம்பரத் துடனே
கதங்கொடு சூழ் கடலுலகைக் கட்டழிக்கும் போதோர்
கப்பல்வடி வாய்மிதந்த காழிநக ரறிவேன் (தாரணி)

ஒருகோவி லிடைமூன்று குளமிருக்கு மந்த
ஊரறிவேன் பேரறிவே னேதமத னுடனே
கருதுமொரு மறையவனைத் தொடர்காலன் றன்னைக்
கண்ணுதல்கால் கொண்டுதைத்த திருக்கடவூரறிவேன் (தா)

உமைமயிலாய்ப் பூசித்த வொருதலத்தி னுடனே
ஓங்கிடுமோ ரரசுசிவன் கோயிலுறை தலமும்
கமலைதவஞ் செய்தலமு மிடைமருதுங் குடந்தைக்
கடிநகரு மேரண்ட நகரமுநா னறிவேன் (தாரணி)

ஐயாறுஞ் சிரகிரியுந் திருவாங்க நகரும்
ஆனைக்கா வுடன்மதுரைப் பெரும்பதியு மிராமன்
மெய்யான பத்தியொடு சிவனையருச் சித்து
வேண்டுவரம் பெற்றவிரா மேசுரமு மறிவேன் (தாரணி)

குறத்தி வசனம்:— அம்மே நான் குளிச்சநதி வளமெலா சொல்றே கேளு

## குறத்தி நதிவளம் கூறுதல்.

ராகம்—மோகனம்] பல்லவி. [தாளம்—திச்ரம்

நானறிந்த நதிகளெல்லாம் நயந்துரைப்பேனம்மே
நதிகளெல்லாம் நயந்துரைப்பே னம்மே

அனுபல்லவி

வானவற்போற் றிடுந்தஞ்சை நீடுசர போஜி
மன்னவர்காத் திடுமிந்த மன்னுபுவி மீதே (நானறிந்த)

சரணங்கள்.

பன்னிடுதாம் பிரவருணி பரவுபெரு வைகை
பொன்னிநதி முத்தாறு புகழ்ந்திடுபா லாறு
சொன்னமுகி கம்பைநதி துலங்கிடுஞ்சே யாறு
கன்னிநெடு யமுனைநதி கண்டறிவே னம்மே (நானறிந்த)

பொங்குதுங்க பத்திரையே போற்றுநிரு மதையே
மங்களஞ்செய் கெடிலநதி மருவுகோதா விரியே
சங்கநதி கபிலநதி சரஸ்வதிகிட் டிணையே
கங்கைநதி யாதிநதி கண்டறிவே னம்மே (நானறிந்த)

இந்தநெடு நதிகளெலா மூழ்கிவந்தே னிங்கே
முந்தியொரு சோழன்மயன் மூண்டகொடும் பிணியே
சிந்திடச்சேர்த் தின்பமருள் சிவகெங்கை தனிலே
அந்தமிலா வினைதீர்தற் காடவந்தே னம்மே (நானறிந்த)

குறத்தி வசனம்:— அம்மே நான் போன தேசவளமெலா சொல்றே கேளு

---

## குறத்தி தேசவளஞ் சொல்லுதல்

ராகம் - சங்கராபரணம்] பல்லவி. [தளாம் - மிச்ரம்

தேசங்கண் மருவிய பேரும் வளமையும்
தெரியக் கூறுவன் மின்னே

அனுபல்லவி.

வாச மலர்ச்சோலை சூழு முயர்தஞ்சை
வாழுஞ் சரபோஜி மன்னவர் போற்றிடு (தேச)

## சரணங்கள்.

வங்கதேச மோடரபி குச்சரம்
மாக தம்புகழ்வி தேகமே
துங்க முற்றிடு கொங்க ணந்திகழ்
துளுவ தேசமெனுந் தேகமே
சிங்க ளங்கவு டங்க லிங்கநற்
றெலுங்கம் நீடுவி வேகமே
இங்கி தந்தரு சோழ தேசமுன்
இலங்கு தேசம நேகமே (தேச)

அங்க தேசமதி லாறு கோட்டையுண்
டவற்று ளொன்றுறு வட்டமே
தங்கு மன்னதிற் காவ லேங்கரன்
சதுர மேலொன்று திட்டமே
பொங்கு மன்னது காவல் செய்வது
புகலு நான்முகற் கிட்டமே
மங்க ளங்கொண்மே லொன்று வெண்பிறை
வடிவ மாலதிற் பட்டமே (தேச)

மீதுகோணமோர் மூன்றி லொன்றதின்
மேலு ருத்திர னீடுமே
ஓது மேலிரு மூன்று கோணத்தோன்
றேருங்கு மீசுரன் கூடுமே
ஏதமில்லதின் மூன்று வட்டமொன்
றிறைச தாசிவ ளூடுமே
போது மின்னவை மூல மாதிய
பொருந்து நாமங்கள் சூடுமே (தேச)

குறத்தி வசனம்:— அம்மே! இந்த சோழநாட்டின் மகிமையை சொல்றே கேளு

## குறத்தி பாட்டு.

ராகம்—கேதாரகௌளம்] பல்லவி [தாளம்—ஆதி

சோழநாட்டின் வளமை யுனக்கு நான்
சொல்லுவேன் கேளடி மானே

அனுபல்லவி

வாழு முயர்மதிற் றஞ்சை சரபோஜி
மகராஜன் மனுநூல்சொல் முறையே யுளமகிழ்ந்து
(சோழ)

சரணகள்.

நாடு தனிலூர்களெல்லா நகரங்கள்
நண்ணிடு மந்நகர் தம்மி லிலங்கிடும்
வீடுகள் யாவையுஞ் சந்தனத் தாருவின்
மேலிடு முத்தரந் தூண்களிசைந்திடும்
மாடமாளிகைகளு நீணிலா முற்றமும்
வாதாய னங்களுமாகி விளங்கிடும்
நீடுமம் மாளிகை யெங்கு மணிதரு
நெல்லு மணிகளும் பொன்னு மலிந்திடும் (சோழ)

நகரகங்க டோறு மருவி யிருக்கின்ற
நால்வகைச் சாதியினோரும் பிறர்களும்
தகுமவர் தங்கட் கிசையுந் தொழிலொடு
சந்ததம் வாழ்வர்கள் மங்கள மாகவே
புகலுந்தே வாலய மெங்கு நன் மண்டபம்
போற்றும் விமானங்கோ புரங்களெல்லாம்
பொன்னின்
சிகர மிலங்குமெந் நாளுந் துலங்கிடும்
தேரு முயர்திரு விழாவு நடந்திடும் (சோழ)

நன்ன கரின்புற மெங்கு மலர்க்காவும்
நளினத் தடாகமு நதியும் வயல்களிற்
கன்ன லெனச்செழுஞ் செந்நெல் பொலிந்திடும்
கன்னல்கள் யாவுங் கமுகி னெழுந்திடும்
மின்னிடை யார்துடை காட்டுங் கதலியும்
மேனியழகினைக் காட்டுந் தளிர்மாவும்
அன்னவர் கொங்கை பெழில்காட் டிளநீர்கள்
அங்குறு தெங்கமு மெங்கு நெருங்கிடும் (சோழ)

## மதனவல்லி குறத்தி பெற்ற வரிசைகளைச் சொல்லும்படிக் கேட்டல்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

பலகலைக ளுணர்ந்ததஞ்சைச் சரபோஜி மன்னவர்தம் பார்மேலுள்ள
மலைவளமே முதலான வளங்களெலா மெடுத்தெனக்கு வளமாச் சொன்னாய்
சிலைவளங்கொ ணுதலணங்கே யென்னவென்ன தேசங்கள் சென்றாயங்கே
இலகெவர்க்குக் குறியுரைத்தா யவர்களென்ன கொடுத்திட்டா ரிசைவாய் சொல்லே

## குறத்தி தான்பெற்ற வரிசைகளைக் கூறுதல்.

குறத்தி பாட்டு.

ராகம் - சுத்தசாவேரி] பல்லவி. [தாளம் - ஆதி

சொன்ன குறிகளும் பெற்ற வரிசையுஞ்
சொல்லுகி றேனடி கண்ணே.

அனுபல்லவி.

கொங்கு தேசமுத லெங்கு மேகிமுன்
குறியு ரைத்தன னங்கே
கோதை மார்மன மகிழ்ந்து மாநிதி
குலவு நற்றுகி லீந்தார் (சொன்ன)

சரணங்கள்

கங்கைமாதினுக் குனக்கொர்காதலன்
கைகளாறிரண் டுடனே
கடிது தோன்றுவ னெனவு ரைத்தனன்
சுடிகை யின்னது தந்தாள் (சொன்ன)

மங்க ளங்கொள்சீ மந்தினிக்குன்
மணாளன் வந்திடு மென்று
மலர்க்கை பார்த்துரைத் தேனெனக்கவள்
கனத்த பொற்குட மீந்தாள் (சொன்ன)

அங்கையற்கணாள் செங்கை பார்த்துமே
லரனு னக்கிறை யாவனென்
றறிந்துரைத்தனன் மகிழ்ந்தெனக்கவ
ளளவிலா வரிசை தந்தாள் (சொன்ன)

தண்மலர்ப்புன லகழிசூழ்ந்திடுந்
தஞ்சையாமிது தன்னில்
தாமரைத்திருக் கோயின்மேவிய
தையல்போல்வளர் மின்னே (சொன்ன)

நன்னிடங்கொரு தெலுங்கமானினி
நாசெய்குடெனச் சொன்னாள்
நாடிநற்குறி யோதினேனிந்த
நாசிகாபரண மீந்தாள் (சொன்ன)

வண்ணமாரொரு மராடமாது மஜ
ஹாத்பஹாக வென்றாள்
மற்றவட்கிசை கைக்குறிக்கவள்
வச்சிரத்தொடி தந்தாள் (சொன்ன)

கண்ணி யிங்கொரு கன்னடப் பெண்நன
கையினநோடே யென்றாள்
கருதவட்கிசை குறிதனக்கவள்
காதினோலை யளித்தாள் (சொன்ன)

அண்ணலங்கொளோர் துலுக்கவஞ்சி மேரா
ஹாத் தேக்கர் போல் ளன்றாள்
அன்னகைக்குறி சொன்னதற்கவள்
மின்னிடார மளித்தாள் (சொன்ன)

ஒண்ணுதல்பெறு மிங்கிலீஷ்மா
தொருத்தி லுக்மைஹாண் டென்றாள்
ஓதினேனவள் பாணிரேகைகண்
டுதவினளிந்த மேகலை (சொன்ன)

குறத்தி வசனம்:— அம்மே! இந்த நாட்டையாள்ற சரபோஜி மகராஜா கொடுத்த வரிசை சொல்றே கேளு

## குறத்தி பாட்டு

ராகம்—தன்யாசி] பல்லவி. [தாளம்—சாபு

மன்னர் சரபோஜி மகராஜ ரெனக்கீந்த
வரிசையைக் கேளடி மானே

அனுபல்லவி.

அன்னம் வளர்ச்சோலை மன்றுமுயர் தஞ்சை
அணிநகர் தனின்மேவுந் தனபதி யெனச்சொல்லும்
(மன்னர்)

## சரணங்கள்

அந்தணர்தங்க ளுடன்புல வோருக்கும்
அனைவர்க்கும் பொன்னு மணியு மிகக்கொண்டு
சந்த்த முஞ்சொரி யன்னவர் கைம்மலர்
தனிலுற் றிருந்திடும் ரேகையெல்லாங்கண்டு
முந்திடு மாதிரை நாளி னுதித்திட்டீர்
முன்னுங் கவியுடன் பொன்னும் பதினொன்றிற்
சுந்தரமாகவி ருந்தத னுல்வெகு
சுகத்துடன் சிரஞ்சீவி யாயிருப் பீரென்றேன் (மன்)

மகுடரே கையுடன் விஜய ரேகையும் வளம்
வாய்த்திடு பாக்கிய ரேகைய துவுமேலே
தகவினுற் றிடுமுயர் புகழினுடன் வித்தை
தருமணி ரேகையு மருவின வதனுலே
புகழுட னிப்புவி யாளுவீர் செல்வமும்
புகழும் வெற்றியும்பெற் றிந்திரன் போலே
அகமகிழ் கொண்டென் றுரைத்தே னதனுக்கென்
அகமகிழ வெய்தவே யுதவினர் மெத்தவே (மன்)

இலங்கிரு சால்வையு முயர்முத்து மாலையும்
ஏறுஞ் சிவிகையு மீராயி ரம்பொன்னும்
நலங்கொள் கடகமும் பலவர்ணச் சேலையும்
நவிலும்பொற் காறையும் நல்கி யதன்பின்னும்
புலன்கொண் மதிதோறு மிருப திருபது
பொன்னும் பெறும்படி யருள்செய்த னர்துன்னும்
வலன்கொண் டிடுவிளை ரிலமு முதவினர்
மகிழ்ச்சியு டன்கொண்டு வணக்கமுற் றேன்முன்னம் (மன்)

மோகினி வசனம்:— ஏகுறமாதே இத்தனை யெல்லாம் சொன்னநீ என் கையையும் பார்த்து குறிசொல் கேள்போம் உனக்கு வேண்டிய வெகுமதிகள் கொடுக்கிறேன்.

## மதனவல்லி விருத்தம்.

குலவுமல யத்துதித்து வந்த தென்றற்
குழவிமலர் பறித்துவிளை யாடுஞ்சோலை
சுலவுமெழிற் றஞ்சைநகர் தன்னில் வாழும்
தோன்றலெனுஞ் சரபோஜி மன்னர் செங்கைத்
தலமினிது பார்த்துரைத்தா யெனது கையுந்
தகவுபெறப் பார்த்துள்ள துரைப்பா யென்னின்
அலகில்கலை கற்றகுற மாதே யுன்ற
னகமகிழ வேண்டுபொரு ளுதவி வேனே

## குறத்தி குறிசொல்லுவதற்கு வேண்டிய சாமக்கிரியை களைப்பற்றிச் சொல்லுகிருள்.

### குறத்தி பாட்டு.

ராகம்—பரசு] கண்ணிகள். [தாளம்—திச்ரம்

சாணகத்தான் முழச்சதுர மெழிகி விளக்
கேற்றி வைத்தி டம்மே—அதில்
தந்திமுக மைந்தனையே சந்தனம்பூ
வறுகணிந்தி டம்மே
காணவுறு கனிவகையெள் பொரிதேங்காய்
நிவேதனஞ்செய் யம்மே—பின்பு
கவினுறுவெற் றிலைதுவர்க்காய் வைத்தொருபொற்
காசும்வைத்தி டம்மே
மாணுறுதூ பங்காட்டு மந்திரத்தா
லருச்சனைசெய் யம்மே—எதிர்
வந்தனஞ்செய் தேத்திடுன்றன் மனக்குறிப்பைக்
குறித்துக்கொள்வா யம்மே

நீனிலங்கொள் சரபோஜி மன்னவர் வாழ்
தஞ்சைவள ரம்மே உன்றன்
நீண்மலர்க்கை தன்னையிங்கே நீட்டுகுறி
பார்த்துரைக்க வம்மே

---

## குறத்தி குறிசொல்ல ஆரம்பிக்கிருள்.

---

### குறத்தி பாட்டு.

ராகம் - சாரங்கா] கண்ணிகள். [தாளம் - திச்ரம்

உள்ளபடி குறியுனக்குக் கூறிடுவே னம்மே—முன்னம்
ஒரு சிறங்கைக் கஞ்சிபசி யாறிடவா—ரம்மே
பிள்ளைதலைக் கொருகரண்டி யெண்ணெயூற்றி டம்மே-அந்தப்
பிள்ளையார்க்குப் படைத்தவெலா மெடுத்துதவிங் கம்மே
தள்ளவொண்ணு வெற்றிலைபாக் கித்தனை தா வம்மே—கெளளி
சத்தமிட்டுன் வலப்புறத்திற் கத்துதல்கே ளம்மே
கள்ளமில்லாச் செல்வமிக வருகுதுபா ரம்மே—அங்கோர்
காரிகைதான் வீதியில்வந் தேனெனலோ ரம்மே
கந்தனுக்கு படைத்ததினை மாவையுத வம்மே உன்றன்
கையதனுல் வைத்தநிறை நாழியுநல் கம்மே
இந்தவகை யெலாமெங்கட் கீந்திடுத லம்மே—பாரில்
எங்குமுள்ள முறையமைதா மின்றைக்கல்ல வம்மே
சுந்தரமார் நின்கையை நீட்டிடுமுன் னம்மே—குறி
சொல்லுசொல்லென் ருந்தைபல்காற் சொல்லுதல்கா—
ணம்மே
சந்ததமுஞ் செம்பொன்மழை பொழிந்துமகிழ்ந் தம்மே
நாளும்
தஞ்சையில்வாழ் சரபமன்ன ரருளுனக்குண் டம்மே

---

## மனதவல்லியின் கைரேகைகளின் விசேஷத்தைபற்றி குறத்தி சொல்லுகிருள்.

### குறத்தி பாட்டு.

ராகம் - பௌளி] கண்ணிகள். [தாளம் - திச்ரம்

ஈதுவச்சிர ரேகை முன்னிதை
யிந்திராணி கையிற் கண்டேன்
இன்னதாலுன் மணுள னிந்திர
னெய்து போகமுள னம்மே
மாது கேளிந்த மகுட ரேகையை
வள்ளி யம்மைகையிற் கண்டேன்
மருவி தாலுன்ற கொழுநன் வேளென
வருவ னின்புற வம்மே
ஓது மின்னது சூல ரேகையீ
துமைமலர்க்கையிற் கண்டேன்
ஓங்கு மின்ன தாலுன் காதல
னுயர்ச்சி பெற்றிருப்பா னம்மே
சோதில் சக்கர ரேகை யீதிதைக்
குலவு செல்விகையிற் கண்டேன்
குறிக்கி னின்மண மகனிம் மேதினி
புரப்ப னின்னதா லம்மே
குமரி யாகிய துர்க்கை கைதனிற்
குலவி ரேகையீ தம்மே
கூறுமின்னது தேறு வெற்றிநின்
கேள்வற் கீந்திடு மம்மே
கமல ரேகையீ திரதி தன்கையிற்
கண்ட ரேகையா மம்மே
கருது நின்கணவ னீடி தால்வெகு
காமியாயிருப்ப னம்மே

தமரு கத்தனி ரேகையா மிது
சங்க ரேகையீ தம்மே
தங்கு நின் மனையி லென்றும் வாத்தியந்
தகமு ழக்குமிவை யம்மே
விமல முற்றிடும் வாணி செங்கையில்
விளங்கு ரேகையீ தம்மே
மேவு மின்னது யாரு மெச்சிடும்
வித்தை நல்கிடு மம்மே
ஓர்வ லஞ்சுழி யுனது மார்பினி
லுற்றி லங்குமீ தம்மே
உன்றனக்கி தென்று மன்னிடு
நன்றி யேதரு மம்மே
தார்வி ளங்குமுன் வலமுலைகணோர்
தழும்பு தோற்றிய தம்மே
தாங்கு பெண்களோர் நான்கு மைந்தனு
முனக்களித்திடு மம்மே
வார்பொ ருத்திடத் தோளி லேயொரு
மறுவிருக்கிற தம்மே
மற்றி தாலுனை யெவரு மெச்சிட
மகிழ்ந்தி லங்குவை யம்மே
பார்வை நீடுறு மேரினால் வெகு
பாக்கி யம்வரு மம்மே
பன்னுசீர்ச்சர போஜிமன்னவன்
மன்னு தஞ்சைவள ரம்மே

---

மதனவல்லி சொல்லுதல்.

இனக்கதிர் முத்து மாலையுங் களிறு
மெழிலுறு சிவிகையும் பரியும்
தனக்குவை பிறவு முயர்புல வோர்க்குத்
தருதலாற் புயலினை வென்ற

கனத்திடு கீர்த்திச் சரபோசி மன்னர்
கவின்பெறுந் தஞ்சை மாநகரில்
அனப்பெடை போல வருகுறக் கொடியே
யகத்துநான் குறித்த தோர்ந் திசையே

## குறத்தி தெய்வங்களை வேண்டுதல்.

### நேரிசை ஆசிரியப்பா.

ராகம் — தோடி.

தலமிது புரந்திடுஞ் சரபோஜி மன்னர்
நலனுறு மதிகொடு நாளும் பணிந்திடச்
சுத்தமார் தஞ்சைத் தொல்பெரும் பதியில்
உத்தம வாலயத் துறை பெருவுடையாய்
பிறைநுதற் சிற்றிடைப் பெரியநாயகியே

ராகம் — காம்போதி.

நிறைமலர்க் கோதை நிமலிகா மாட்சி
தென்றிரு வீதி திகழ்ந்திடுங் காளி
வென்றிகொள் குணபால் வெள்ளைப் பிள்ளையே
ஆனந்த வல்லி யருட்கனு கூலா
ஈனந் தவிர்த்திடு மிரட்டைப் பிள்ளையார்

ராகம் — அட்டாணா.

சரவண பவனே சத்தகன் னியர்காள்
வரமிக வுதவும் வள்ளிநா யகியே
எக்கலா தேவி யிறைஞ்சினே னுங்களை
மிக்கவுன் மகிழ்வொடு மேவியென் முன்னின்
றிந்தமெல் லியலா ளெண்ணிய வெண்ணம்

ராகம்—பைரவி.

முந்துதெய் வங்களே முன்னிய வகையோ
காசோ பணமோ கனகமோ வெள்ளியோ
மாசிலாப் பவழமோ வைரமோ முத்தோ
மாலையோ பணியோ மரமோ கொடிகளோ
சேலையோ கனியோ திருமணச் செய்தியோ

ராகம் — கல்யாணி.

நாலுகாற் சீவனே நரர்களோ பறவையோ
கொடுத்திடுங் குறிப்போ கொள்வதற் கெண்ணமோ
வாகைவே லரசர் வரவிடுந் தூதோ
தோகைதா னவர்பாற் றொடர்ந்திடுஞ் செய்கையோ
இன்ன தென்னவே யெடுத்து
மன்னுற நான்சொல வகுத்தருள் வீரே

---

## குறத்தியும் மதனவல்லியும் பேசிக்கொள்ளுதல்.
## மோகினி மனக்குறிப்பு குறத்தி சொல்லுகிருள்

---

ராகம்—எதுகுலகாம்போதி]     கண்ணிகள்.     [தாளம்—திச்ரம்

குறத்தி கூற்று.

அன்னநடை யாயெழில்கொண் மாமயிலே மின்னே
அம்புயத்தின் மேல்வளர் கும்பமுலைப் பொன்னே
கன்னிகையே சிற்றிடையே பைங்கிளியே மேலுன்
கருத்திலொரு கவலையுண்ட துரைத்திடுவே னம்மே
துன்னுமத யானைமேலோர் மன்னவன்றன் சேனை
சூழநெடு வீதிதனிற் றேகையர்க ளுடனீ
மன்னிவிளை யாடிடுங்காற் பவனிவந்தான் வந்த
மதயானை தனைக்கண்டு மருண்டனைநீ யம்மே

## மதனவல்லி கூற்று.

என்னடீ மலைக்குறத்தி குறிசொன்னாள் முன்னம்
இசைத்துவந்த படிமுற்று மிசைக்கவேண்டு மல்லோ
சொன்னவழி தன்னைவிட்டு வேறொன்றை யிங்கே
தொடுத்துக்கொண்டா யதற்குளென்ன நினைந்துக்
கொண்டா யோடீ
வன்னமத யானையைமுன் கண்டறியே னேங்கு
மதயானை கண்டவரை மதியமுங் காய்ந் திடுமோ
இன்னுலவை சீறிடுமோ சிலைமதனன் போருக்
கிசைந்திடுமோ பாலமுது கசந்துவிடு மோடீ

## குறத்தி கூற்று

உள்ளபடி சொல்லுகிறேன் பெண்ணரசே யந்த
ஓங்குமத யானையின்மே லாங்கிருந் திசைந்த
வள்ளலினைக் கண்டுளத்தி லாசை கொண்டாய் கொண்ட
வண்மையினை னண்ணியதிவ் வுண்மயக்க மம்மே
கொள்ளுமிந்த வகையெல்லா முன்னுனக்கே யெண்ணிக்
குறித்துரைத்தான் முனிவையென்று மரைத்துரைத்தேன்
மின்னே
விள்ளுமிந்த வெதுப்பு மெய்யிற் கண்டதவு மிதனை
வேறொன்று மில்லையது கூறினேன்கே ளம்மே

## மதனவல்லி கூற்று.

குஞ்சரத்தி லெவரேனு மேறிச்சென்று லாசை
கொள்ளுவனோ வப்படிநீ கொண்டதுண்டே கொல்லு
வஞ்சியிங்கே வாய்த்துடுக்கான மிஞ்சிப்பேசாதொன் றும்
மற்றவன்று னெந்தவூர வன்பேரென்னேடி

## குறத்தி கூற்று.

கஞ்சமல ரானனத்தாய் குறிநான் சொல்வ தோவென்
கருத்திலிருந் துரைக்கின்ரு ளெக்கலா தேவி
தஞ்சைநகர் தனில்வாழ்வோ னுலகத்தை யாள்வோன்
சாபோஜி மன்னவனு மன்னவன் பேரம்மே
நிறைசெல்வத் தன்னவன்மே லாசைகொள்ள நோற்று
நீமுன்பு செய்ததொரு புண்ணியங்காண் பாயே
பிறைநுதலா யினியெனக்கு நீமறைக்க வேண்டாம்
பெருவுடையா ரருளதனு லவனைச்சேர் வாயே
நறைமலர்த்தா ருடன்ஹாது வந்திடுமின் றென்ன
நவின்றனளம் மதனவல்லி நாணுடனே கேட்டே
உருமகிழ்ச்சி கொண்டுமணிப் பணிகளுடன் மற்றும்
உற்றகலை நல்கவவள் பெற்றிறைஞ்சி ஞளே.

---

குறத்திசொன்ன குறிகளைக்கேட்டு மதனவல்லி மனமகிழ்ந்து அவளுக்கு சன்மானங்கள் கொடுத்து மனமகிழச் செய்கிருள்.

---

குறத்தி வசனம்:- ஏ அம்மே நீ நினைச்சபடி பிரகதீசரருளாலே அந்த மவராசா அருள் உனக்கு கிடைக்கும். கவலைப்படாதே.

## விருத்தம்.

நறுமலர்த் தாருடன் ஹாது நலமுடனே யிப்போது
வருமெனவே மதனவல்லி மாதுரைக்க உறுமகிழ்ச்சி
கொண்டுமனம் நாணிகலை குறைவில்லா மணியீயக்
கண்டுமகிழ் கொண்டிட்டாள் காண்

குறத்தியும் மோகினியும் செல்லுகிருர்கள்.

காட்சி முடிவு.

---

## காட்சி—VI.

### குறத்தியாகிய சிங்கியைத் தேடிக்கொண்டு அவள் புருஷனுன குறச்சிங்கனும் அவன் தோழன் குளுவனும் வருகிறுர்கள்.

---

### குளுவன் விருத்தம்.

நீடானைச் செவியனெடு குதிரை வாலன்
நிகழ்த்துபுலி வாயனென்னும் நாய்கள் பக்கத்
தோடாமற் புலனையடக் குணந்தோர் போல
வொருவழியாய் வரக்கூவிக் கொண்டு பின்னும்
ஈடான கண்ணிவலை தடங்கை யிற்கொண்
டிசைகுளுவ னெடுசிங்கன் வந்தான் சோழ
நாடாளுஞ் சரபோஜி மன்னர் தஞ்சை
நகர்புறத்திற் சிங்கிதனை நாடித்தானே.

---

### சிங்கனைப்பற்றிக் குளுவன் வர்ணித்தல்.

---

### குளுவன் பாட்டு.

ராகம் - மத்யமாவதி] பல்லவி. [தாளம் - திச்ரம்

சிங்கன் வந்தானே மலைக்குறச்
சிங்கன் வந்தானே

தீர்மானம்.

தோதிந்த, தக்க, தோதிந்த, தத்தோம், தத்தோம்,
தொங்கா
தகதோம் தொங்கா, தத்தோங்கா, தகதோங்கா
தளாங்குதோம், ததிங்கிணதோம்.

அனுபல்லவி.

மங்களம் பெருகிடுந் தஞ்சைநன் னகரின்
மருவுஞ் சரபோஜி மகராஜர் நாட்டினில் (சிங்கன்)

சரணங்கள்.

கையினி லீட்டி யெடுத்துக்கொண்டு—நல்ல
காவிச் சல்லடந் தொடுத்துக்கொண்டு
மெய்யினில் வெண்ணீறு பூசிக்கொண்டு—வெகு
வேடிக்கை யாகப் பேசிக்கொண்டு (சிங்கன்)

வெறிக்கச் சிலர்களை யுறுக்கிக் கொண்டு—நீடு
மேன்மீசை தன்னை முறுக்கிக்கொண்டு
நெறிக்குட் பறவைமே லூட்ட மோடு—எதிர்
நேரு மதன்மீது வேட்டமோடு (சிங்கன்)

கொங்கொடு பாண்டிய மெங்கு மலைந்து-நறுங்
கொங்கலர் குந்தள மெங்கு மிலைந்து
பங்கமில் பூவணை தங்கிமுன் கூடி-மிக
இங்கித மேதருஞ் சிங்கியைத்தேடி (சிங்கன்)

விருத்தம்.

இந்தவகை வந்தகுறச் சிங்கன் பூமிக்
கிந்திரனு மெங்கள்சர போஜி மன்னன்
சந்ததமுங் கொண்டலெனச் செம்பொன்மாரி
தனையுற்றோர் கொளப்பொழிந்து மகிழ்ந்து வாழும்
சுந்தரமார் தஞ்சைநகர்ப் புறத்தி னீடித்
தொகு பறவைக் குலங்கண்டு வேட்டையாடப்
பந்தமுறு குளுவனைப்பார்த் திங்கே கண்ணி
பாச்சென்று னவனுமிதோ வரச்சென்றானே

## சிங்கன் தன்னுடைய தோழனுகிய குளுவனைப் பார்த்துப் பறவை வேட்டைக்குறிய கண்ணி குத்தச் சொல்லுகிருன்.

### சிங்கன் பாட்டு.

ராகம்—அமிர்தகல்யாணி] பல்லவி. [தாளம்—திச்ரம்

கண்ணி குத்தடா குளுவா வகையாக்
கண்ணி குத்தடா

அனுபல்லவி.

எண்ணிய பறவைகள் சிக்கினுற் பிரகதீசர்
இளைய பிள்ளையா ரேறித்திருந்திட
வண்ண மயிலொன்று விடுவோ மெனநன்ருய்
மனத்திற் றிடமாகக் குறித்துக்கொண்டிங்கே (கண்ணி)

சரணங்கள்.

காலினின் மாட்டிய கண்ணியைப் பக்கிகள்
கடித்துத் தகர்த்திடு மப்பால்
மேலிற் கழுத்தினின் மாட்டிக்கொண் டாற்காலால்
மெல்ல விழுத்திடுங் குளுவா
சாலைத்திருடர்கள் காலினுங் கையினுஞ்
சாற்றுந் தொழுக்கட்டை மாட்டிவிட்டாற்போலக்
காலினுங் கழுத்தினு மாட்டிக் கொள்ளும்படி
கருதிக் குத்தடா குளுவா (கண்ணி)

ஊடுறக் கண்ணியை விரித்துவைத் தானுழைந்
தோடிப் போமடா பக்கி
வாடுறக் கண்ணியைச் சுருக்கிவைத் தாற்றலை
மாட்டிக்கொள் ளாதடா குளுவா

நாடுங் கயவரை யாளு மறிவினோர்
நடுத்தர மாக விடுத்து வருதல்போல்
நீடுங்கண் ணியைமிக விரியாமற் குவியாமல்
நேராகத் குத்தடா குளுவா (கண்ணி)

பாவத் தொழிலவன் பிறரையுந் தனைச் சேரப்
பண்ணுந் திறமெனப் புள்ளின மெலாந்தன்போல்
காவற் பட்சசெய்யுந் தீவக் குருவியைக்
கண்ணிக்குள் வைத்திடு குளுவா
பூவுல கந்தனை யாளு முயர்சர
போஜி யெனுமக ராஜன் மகிழ்வொடு
மேவுந்தென் றஞ்சை நகர்ப்புறத் தேயொரு
வேடிக்கை பார்ப்பமடா குளுவா (கண்ணி)

---

**கண்ணிக்குள்ளே வருகிற பறவைகள் குளுவன் பேசுகிறதைக்கண்டு கலைந்து போகின்றன வென்று அவனை இறையாதேயென்று பறவைகள் மேய்வதும் போவதும் தோன்றும் படி குறவன் சொல்லுகிறான்.**

---

ராகம்—பூரிகல்யாணி] பல்லவி. [தாளம்—திச்ரம்

கூப்பிடாதையே பொறு பொறு
கூப்பிடாதையே ஐயே

அனுபல்லவி.

காப்புறு தாஸ்தான்ம ஹால்பெருந் தோட்டத்தில்
கவின்மயில் வருகுது குமரற்கு விடலாகும் (கூப்)

**சரணங்கள்.**

பரந்த சிறைப்பெருங் கம்புள் வருகுது
பச்சைப் புருவிலொரு லெச்சம் வருகுது
கருங்குயில் வருகுது நெருங்கிடும் கவுதாரி
கள்ளத் தனங்கொண்டு மெள்ளப் பதுங்குது (கூப்)

செந்தமி ழிலக்கணந் தெரியார் கவிசொல்லிச்
சேரு மதன்குற்றந் தெரிந்தோர் வினவுங்கால்
சிந்தைமயங்கி விழித்தல்போற் கண்ணியில்
சிக்கிக்கொண் டிங்கொரு பக்கி விழிக்குத்து (கூப்)

மாடப் புருவோடு காடையுங் கலவிசெய்
மாதர் களத்தொலி போலவே கூவிக்கொண்
டோடி வருகுது நாய்களைத் தூரவே
ஒதுங்கவைத் திடுநீயும் பதுங்கி யிருந்திடு (கூப்)

கொக்குக் கறியினிப்புச் சற்று மறியாயே
கூறிய சேலத்துக் சர்க்கரை போலுரு
சிக்கும் வயிறு பசிக்குது மெள்ளவந்து
சிக்கிக்கொண் டாலதுனக் கித்தனை தாரேன் (கூப்)

சாக்கிர மாதியைந் திடத்துஞ் சிலசில
தத்துவத் தோடுயிர் சாரத் திரிதல்போல்
தேக்கிடு மங்கங்கே சிலபக்கி கணிற்கத்
திகழொடு குஞ்சுடன் வருகுதொரு பக்கி (கூப்)

ஆங்காரந் தன்னை யடக்கிப் புலனைவென்
றகத்தைப் பரத்தி னிடத்தி னிறுத்தியே
தூங்காமற் றூங்கிடு மாங்கவர் போலவே
தூயவொரு நாரை யோய்வுற் றிருக்குது (கூப்)

ஒருவன்பல் வகைச்சொற்க ளுரைப்பதெனப் புட்கள்
ஒலிவகை யெலாங்கூவுங் குருவி வருகுது

வருமிக் குருவியைத் தஞ்சைச் சரபோஜி
மகராஜ னுக்கீந்தால் வெகுமானம் வாங்கலாம் (கூப்)

## குளுவன் சிங்கனிடம் கூறல்.

### எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

காவென் றுங் கீயென் றுங் குக்கூவென் றுங்
கக்வென் றுங் கிகியென் றுங் கக்கோவென் றும்
கூவிக்கொண் டிருந்த வெல்லாஞ் சும்மா விங்கே
குந்தியிரு நாங்கள் போய் வருவோ மென் று
போவதுபா ருணோப்புக் காட்டி நீயிப்
போதுபக்கி பிடித்ததினிப் போதுமுன்றன்
அவியன்ன சிங்கிதனைத் தேடு சிங்கா
வண்ணல்சர போஜிதஞ்சை யணுகித்தானே

## சிங்கன் சிங்கியை நினைத்து வருந்துதல்.

### அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

மறந்து விட்டேன் சிங்கிதனை
மன் னும் அனையாள் முலைகாட்டும்
நிறங்கொ ணேமிப் புள்ளினங்கா
ணிலவு நடைகாட் டனக்குலங்காள்
திறங்கொண் மொழியைக் காட்டுகிளித்
திரள்கா டஞ்சை நகரினிடைச்
சிறந்தி டவளை யெதிர்கண்டாற்
சேர லாநீர் சொல்வீரோ

## சிங்கன் கொச்சகக் கலிப்பா.

பரிக்குலஞ்சூழ் சேனையினுன் பார்மே லுயர்கீர்த்தி
விரித்தசர போஜிமன் னன்மேவுதஞ்சை தன்னிடைநான்
வரித்தடங்கண் சிங்கி மணிமார் பிடத்திற் கொண்டுதினம்
தரிக்குமொரு பூணுகிற் றனத்தை விட்டுப் பிரியேனே

## உடன் சிங்கன் விருத்தம்.

நாடு புரக்குமெங்கள் சரபோஜி நரேந்திரன்றன்
நீடுபுகழ்த் தஞ்சை நெடுநகரிற் சிங்கிதனைத்
தேடி யலேவேனே செப்புமவ ளேந்துகுறக்
கூடைவடி வாயிருந்தாற் கூடவே வருவேனே

## குறத்தி காணுததினுல் குறவன் வருந்திப் புலம்பல்.

ராகம் - கன்னடம்] பல்லவி. [தாளம் - தீச்ரம்

வஞ்சியைக் காணேனே ஐயேகுற
வஞ்சியைக் காணேனே

அனுபல்லவி.

மஞ்சுலவுஞ் சோலைகளும் வான்மதிலுஞ் சூழுமுயர்
தஞ்சைநகர் வாழுமெங்கள் சரபோஜி மன்னர் நாட்டில்
சட்டெனவே ளிட்டகல கத்திலென்னை விட்டகன்ற
(வஞ்சியை)

## சரணங்கள்.

தாளத் தனத்தைப் பார்க்க மேலே கலையைநீக்கச்
சற்றே தொடுவே ஞாசை கொண்டு—கையைத்
தள்ளிவிடு வாளொரு கிள்ளுமிடு வாள்கன்னந்
தன்னிலவள் பின்னுமது கண்டு—அவள்
வாள்விழியால் மதனுக் கென்னைக் காட்டுவாள்—அவன்
வன்கணையி னுலுடலை வாட்டுவாள் காம
வன்னிதனை முன்னியெழ மூட்டுவாள்—கிட்ட
வாவெனச்செவ் வாய் மலர்த்தே னூட்டுவாள்—அந்த
வங்கணச் சிங்கிதன் கொங்கைத் துணை—யெண்ணி
மனமீங் குருகுது—தரு
மயலோ பெருகுது—ஒரு
வகையாய் வருகுது—பஞ்ச
வன்னக் கிளியையின்சொ லன்னப் பெடையை
யென்றன் (வஞ்சியை)

பந்துவராளிபுன் னாகவராளி
பைரவி தோடியிற் பாடுவாள்—பின்பு
பரிவுதர வெழுந்து தெரிவுபெற மகிழ்ந்து
பழகு முபரியிற் கூடுவாள்—மிக
விந்தைவிந்தை யாகப் பேச்சுப் படிப்பாள்—கொம்பின்
மேவுமயில் போற்சுழன்று நடிப்பாள்—என்கை
வெள்ளிலைவாய் கொள்ளத்துடி துடிப்பாள்—சுரத
வித்தையினை முற்றுமங்கே முடிப்பாள்—ஐயே
மெய்யாகச் சொல்லுறேனந்த வொய்யாரக்—காரிமதன்
மின்னின் மிஞ்சுவாள்—மருவப்
பின்னுங் கெஞ்சுவாள்—இந்த
வண்ணங் கொஞ்சுவாள்—மானின்
மிகவுங் குதிப்பள்பேணித் தகவுந் துதிப்பளந்த (வஞ்சியை)

இன்றைக் கெல்லாமவ ளழகைப் பார்த்துக்கொண்டிருக்
காலஞ்சற்றும் பசியாது—மேலும்
என்று மவள்வடிவைக் கண்டோர் தமக்—கூரம்பை
யெழிலு மனத்துக்கு ருசியாது—இளந்
தென்றல் புலிபோலப் பாயுதே—வானில்
திங்கள் செங்கதிர் போலக் காயுதே—கடல்
திரையோசை யுயிரெங்கென் றாயுதே—அன்றிற்
சிறுபுட்கள் பெடையோடு மேயுதே—ஐயே
தேசாதே சம்போனேன் றேடியலேந்துங் காணேன்
சின்னஞ் சிறியாள்—நலன்
எண்ணு நெறியாள்—புற
நண்ணி யறியாள்—எங்கே
சென்று தியங்கினளோ வெங்கே நின்று
மயங்கினளோ அந்தே (வஞ்சியை)

## குறவன் சிங்கனைக் குறத்தியின் அடையாளம் வினவுதல்.

### எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

திறத்தினுயர் சரபோஜி மன்னன் றஞ்சைத்
திருநாட்டில் யாவர்களுஞ் செல்வ மிக்கோர்
மறத்தடங்கண் மாதரெல்லா மணிகளாலும்
வடிவாலுந் திருமகளை நிகர்வர் கண்டாய்
நிறத்தனிவேல் பிடித்திடுகைக் குறவா விங்கே
நிலைபெறவே வருவாதி யின்ன வென்றுன்
குறத்திதனக் கடையாள முரைத்தா னுன்மேற்
கூறலா நீ கண்டு சேரலாமே

## சிங்கன் சிங்கியின் அடையாளங் கூறுதல்.

இராகம் - சுருட்டி [ பல்லவி. [தாளம் - திச்ரம்

கேளடையே சிங்கிக் கடையாளம்
கேளடையே

அனுபல்லவி.

நாளுமுல காளுஞ்சர போஜி மகராஜர்
நண்ணுமுயர் தஞ்சை யென்னும் நகரிடை
(கேளடையே)

சரணங்கள்.

கன்னமதி யிலேயிரண்டு சின்னவடு வுண்டு
கள்குடித்த வெறியினுளன் கடித்ததுண்டு பண்டு
வன்னமுலை நன்னயங்கொள் சொன்னமலர்ச் செண்டு
வாயமுதம் பால்கனிதேன் சீனியொடு கண்டு
மன்னு மனநடை யன்ன நடையளொரு
மின்னு மிணையலவே யென்று நடையளின்னம் (கேள)

வதனஞ்செந் தாமரையின் போதெனவே கூடும்
வண்டினங்கள் போல்விழிகள் காதினள வோடும்
எதிர்வோர்கண் மனமேறிக் காதூச லாடும்
ஏற்றகுமிழ் மூக்கினெழில் பார்க்கினிகந் தோடும்
இன்ப மொருவுருக் கொண்டதி வள்வடி
வென்று மனிதர்கள் கண்டுசொல்லுவர் நன்றாய்
(கேளடையே)

கறுத்த குமரியென்மேல் மெத்தவிசு வாசி
கனத்தனைமுன் பழித்ததையக் தரத்தில்விட்ட கேசி
குறித்துணர்ந்த திறத்தினர்கள் போற்றுசர போசி
குரிசிலுயர் தஞ்சைகண்டு வருவனென்று பேசு

குடக்கி னுயர்நேரி யடுக்க விடையென்னை
நிறுத்தி யவனிந்த நெறிக்கண் வந்தாள் சொல்லக்
(கேளடையே)

## சிங்கியைக் காட்டுவதாகக் குளுவன் சொல்லும் வெண்பா.

சொன்னவடை யாளந் துலங்கவந்தித் தஞ்சையினோர்
கன்னி யிருக்கின்றாள் காட்டுகின்றேன்—அன்னவளைக்
காட்டினு லேயெனநீ கைக்கூலி தந்திடுவாய்
ஈட்டமுறச் சிங்கா வெனக்கு

## சிங்கன் குளுவனிடம் சிங்கியிருக்குமிடத்தைக் காட்டும் படியாக வருந்திக் கேட்டுக்கொள்ளல்.

ராகம்—நாதநாமக்கிரியை] [தாளம்—திச்ரம்

பல்லவி.

காட்டி விடையே சிங்கியைக்
காட்டி விடையே

அனுபல்லவி.

நாட்டி னுயர்சோழ நாடு புரந்திடும்
நரபதி சரபோஜி மகராஜர் நகரினில் (காட்டி)

சரணங்கள்

ஆயிரம் பெண்களைக் கூடினு லுங்காமம்
அடங்கா திருக்க மருந்து தருகிறேன்

மேயவுலகெங்கு மோர்நொடி தனிற்சென்று
விரைவில் வரவொரு குளிகை தருகிறேன்
தூய நகைமட மாதர் தொடர்ந்திடத்
தூவும் படிவாடைப் பொடியொன்று தருகிறேன்
பேயொடு பூதங்க ளேவியது செய்யப்
பிறங்கொரு மந்திரஞ் சொல்லித்தருகிறேன்
(காட்டி)

காற்றைப் பிடித்துக் கரகத் தடைப்பதுங்
கண்கட்டு வித்தையுங் காட்டித்தருகிறேன்
ஆற்றல்கொ ளக்கினித் தம்பஞ் சலத்தம்ப
மாகரு டணம்வசியஞ் சொல்லித் தருகிறேன்
ஏற்றிடு மூப்பினர் சிறுபிள்ளை களாகி
யிலங்கிட மூலிகை யிருக்குது தருகிறேன்
மாற்றற் கரிய பிணிகளை மாற்றிட
மணியொ ன்றிருக்கிற ததுவுந் தருகிறேன்
(காட்டி)

பகர்ந்திடும் பேச்சினிற் பிறர்பொரு ளினைத்தெட்டிப்
பறிக்கும் படியொரு நரிக்கொம்பு தருகிறேன்
இகலு மிரும்பினைப் பொன்னுக்கிக் கொள்ளலாம்
இதற்கொரு பச்சிலை புனக்குத் தருகிறேன்
திகழிங் கொருவர்தம் மனத்தெண் ணினவெல்லாம்
தெரிந்து சொலும்வித்தை பரிந்து தருகிறேன்
தகுமிவை யெல்லாநீ யுணர்ந்துகொண் டாலுன்னைச்
சரபோஜி மன்னர் புகழ்ந்துகொள் வார்மெத்தக்
(காட்டி)

## வேறொரு குளுவன் பிரவேசித்தல். குறச்சிங்கி அங்கே யிருக்கிறாளென்று குறவனுக்குச் சொல்லுகிறான்.

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

தரியலரை வென்றுபுவி யாளு மெங்கள்
சரபோஜி மன்னவர்தென் றஞ்சை யுற்றோர்
பெரியதல மருவிமண மகிழ்ச்சி நீடு
பெற்றிடுவா ரின்னதுதான் சித்தமாகும்
உரியவித னலிந்த நகரை நீயு
முற்றனையே பெற்றிடுவை யுறுதியாயுன்
கரியமலர்க் கோதையதோ நிற்கின் றாள்பார்
கருதுவரைக் குறமகனே யணுகித்தானே

## சிங்கனும் குறவனும் பேசிக்கொண்டே வர வழியில் சிங்கியை சந்திக்கிறார்கள்.

ஆசிரிய விருத்தம்.

தாரணி புகழுந் தஞ்சைச் சரபோஜி மன்னர் நாட்டில்
கூரணி நெடுவேற் சிங்கன் குறச்சிங்கி தன்னைக் கண்டான்
வாரணி தனத்தினாளை மற்றவன் சிலமுன்கேட்க
ஏரணி மாதுங்கேட்க விருவருங் கூறுவாரே

## சிங்கனும் சிங்கியும் சரசமாக பேசிக்கொள்ளுகிறார்கள்

சிகங்னும் சிங்கியும் உரையாடல்.

பாட்டு.

ராகம்—முகாரி] கண்ணிகள். [தாளம்—திச்ரம்

சிங்கன்:— எந்தத் தேசம் விட்டெந்தத் தேசம்வந்தாய்
சிங்கி—மேல்

சிங்கி:— எங்கெங்குத் தேடினை யெளக்கின் றுரையடா—சிங்கா

சிங்கன்:— ஆலங் குடிகண் டிக்குடி தேடினேன் சிங்கி—கூறும்

சிங்கி:— அம்பலந் தேட வறிவுனக் கில்லையே சிங்கா

சிங்கன்:— வலம்புரிக் களம்பார்க்கத் தினங்குறித் தலையுற்றேன்
சிங்கி—அடா

சிங்சி:— மற்றதல்லா லுரத்து வல்லநீ தேடலையோ சிங்கா

சிங்கன்:— வன்னக்குற் றால வயினுறத் தேடினேன்
சிங்கி—அன்று

சிங்கி:— மன்னு மியலுறு மாயூரந் தேடலையோ சிங்கா

சிங்கன்:— இலங்கிய காஞ்சி யிடைமிகத் தேடினேன்
சிங்கி—நல்ல

சிங்கி:— இசைதரு நாகைதே டெண்ணமாங் கில்லையோ
சிங்கா

சிங்கன்:— கூடலூ ருக்குமேற் கூடவுந் தேடினேன் சிங்கி—நான்

சிங்கி:— கூடவிருந்திட்டாற் குறித்ததை தேடாயோ சிங்கா

சிங்கன்:— தஞ்சையைப் பாரென்று சகலருஞ் சொன்னார்கள்
சிங்கி—இங்கே

சிங்கி:— சாற்றுங் குறிசொல்லித் தனந்தேட வந்தேனடா சிங்கா

சிங்கன்:— உனக்குள்ள தனந்தான்மே லெனக்கு முதவலாமே
சிங்கி—அடா

சிங்கி:— ஊரார் தனத்தினுக் கேனித் தனையாசை சிங்கா

சிங்கன்:— மறுதுணை யில்லாமற் றனியே வரலாமோ
சிங்கி—பாரில்

சிங்கி:— பிறைநுத லார்க்குத்தந் நிறைதானே துணையன்றோ
சிங்கா

சிங்கன்:— இருதனமேலு மிலுப்பைப்பூ வருவானேன்
சிங்கி—அது

சிங்கி:— சரபோஜி மன்னரருண்முத்து மாலையடா சிங்கா

சிங்கன்:— புதுமதி நெற்றியிற் பூனைக்கண்ணிருப் பானேன்
சிங்கி—அது

சிங்கி:— மதனவல்லி யீந்த வைடூரியச் சுட்டியடா சிங்கா

சிங்கன்:— பாம்புரி தன்னை யிடையி லுடுப்பானேன் சிங்கி-அது

சிங்கி:— பாம்புரி யோமணிப் பட்டிகை யல்லவோ சிங்கா

சிங்கன்:— அடிமை வேலையிட் டாள்வதெப் போதடி
சிங்கி—மெத்தத்

சிங்கி:— துடியாதே நானதற்குச் சொன்னேனே யல்லென்று
சிங்கா

சிங்கன்:— பந்து பிடிக்கக்கை பதைக்குது பாரடி சிங்கி—நீ

சிங்கி:— விந்தையே சுவையென்னின் மேலா யிருப்பேனுன்
சிங்கா

சிங்கன்:— காமவே டன்கையிற் காட்டிக் கொடுக்காதே சிங்கி—
என்றும்

சிங்கி:— நாமிரு வருங்கூடி நயந்து வாழ் வோமடா சிங்கா

சிங்கன்:— குலவுஞ் சரபோஜி மகராஜர் தமை வாழ்த்திக்
கொண்டிங் கிருப்பமடி சிங்கி—இங்கு

சிங்கி:— நலதிப் படியேநாம் செய் தாலவர்தயை நமக்குக்
கிடைக்குமடா சிங்கா

சிங்கன்:— அவர் சுகமாக விருக்கப் பிரகதீச ரருட்பதம்
போற்றுவோம் சிங்கி—இந்த

சிங்கி:— அவனியி லெவர்களுஞ் சுகமே யிருக்கணு மவர்பதம்
போற்றுவோம் சிங்கா